# அறிவிசை

விசையின் திசையில்.... படைப்பாற்றல்



இதழ் 2

பங்குனி — சித்திரை 2004



இருதிங்கள் இதழ்

விலை ரூ. 20/=

## கலைகளில் நீலநிறம்

நம் ஐம்புலன்களில் ஒன்றான கண்ணிலுள்ள ஒளியுணர் நரம்புகளில் ஒளி விழும்போது உண்டாகும் ஒரு வகையான உணர்வே வண்ணமாகும். இயற்கையாகவே படைப்பிலுள்ள வண்ணங்கள் அல்லது சாயமிடல் (Dyeing) ஓவியந்தீட்டல் (Painting) அல்லது அச்சிடல் (Printing) மூலம் நிறமிகளைக் (Pigment) கொண்டு உருவாக்கப்படும் வண்ணங்கள் அனைத்தும் ஒளியினாலும் கண்ணில் விழும் ஒளியின் தன்மையினாலும் உருவாக்கப்படுகின்றன.

ஒளி ஆற்றலின் ஒரு வடிவமாகும், ஒவ்வொரு வண்ணமும் வெவ்வேறு அலை நீளத்தைக் கொண்ட மின்காந்த அலைகளாகும்.

ஒளியின் முதன்மை நிறங்களான நீலம், மஞ்சள், சிவப்பு (440mm,550mm,640mm) அலைநீளத்தை முறையே கொண்டுள்ளன.

### நிறங்கள் ஆழ்மனதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன

மனநிலை செயல் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நிறத்தைப்பற்றி அறிந்துகொள்வதற்கு நிறங்கள் பற்றிய இயற்பியல் (Colour physics) அறிவு மட்டுமன்றி உடற்கூறு அமைப்பும் மனநிலைப் பாங்கும் அவசியமாகிறது. எவ்வாறு நாம் ஓசையினால் பரவசமடைவதும் பாதிப்படைவதும் சாத்தியமோ அதுபோல நிறங்களினாலும் மனநிலையில் பாதிப்பு ஏற்படுகின்றன.

ஒத்தஅளவும், சூழலும் உள்ள நீலவர்ணம் மற்றும் சிவப்புவர்ணம் பூசப்பட்ட அறைகள் முறையே குளிர்ச்சியாகவும் கதகதப்பாகவும் இருப்பதில் இருந்து நிறங்களின் பாதிப்பை அறியாலாம்.

சிலருக்கு குளிர்ச்சியான நீலநிறம் மனஅமைதியை அளித்துச் சாந்தமான சூழ்நிலையை உருவாக்குகின்றது. மேலும் சிலருக்கு அடர்ந்த நீலநிறமுள்ள சூழல் மனஇறுக்கத்தினை ஏற்படுத்துகின்றது என சூழலியளாளர் கூறியுள்ளனர்.

இன்றைய நவீனமருத்துவத்தில் சிலவித வலிகளைக் குணப்படுத்த உளவியலாளர்கள் வண்ண மருத்துவ முறையினை (Colour therapy) கையாண்டு வருகின்றனர்.

நன்றி:- அணுவில் இருந்து ஆகாயம் வரை

---

## தேனீயின் மரபணு வரைபடம்

மனிதன், பழ ஈ ஆகியவற்றின் வரிசையில் தேனீக்களின் மரபணு வரை படத்தையும் விஞ்ஞானிகள் தயாரித்திருக்கின்றார்கள்.

Apis Mellifera என்ற விஞ்ஞானப் பெயரைக் கொண்ட இந்த தேனீயின் மரபணு வரைபடம், உயிரியல் மற்றும் விவசாய ஆராய்ச்சியில் பயன்படுத்துவதற்காக www.ncbi.nih.gov / Genbank என்ற இணைய முகவரியில் வெளியிடப்பட்டிருக்கின்றது. தேனீயின் இந்த மரபணு வரிசை மனிதனுடன் ஒப்பிடும்போது பத்தில் ஒரு பங்குடையதாகக் காணப்படுகின்றது.

தேனை உற்பத்தி செய்வதற்கு மட்டுமன்றி pollinate ஐ உற்பத்தி செய்வதற்கும் தேனீ பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வாமை போன்றவற்றைக் குணப்படுத்துவதற்கு pollinate ஐ பயன்படுத்துவது குறித்து தீவிர ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது.

## அறிவிசை

விசையின் திசையில் . . படைப்பாற்றல்

இதழ் ௦௨ பங்குனி – சித்திரை, 2004

**நிர்வாக ஆசிரியர்**
தி. செல்வமனோகரன்

**பிரதம ஆசிரியர்**
பா. துவாரகன்

**இணை ஆசிரியர்**
கெ. இந்திரமோகன்

**தயாரிப்பில் உதவி**
சு. பாஸ்கரலிங்கம்
ரி.றொஷான்

**கணினிவடிவமைப்பு**
mOuse Pvt Ltd

**அச்சு**
குரு பிரின்டேர்ஸ்
திருநெல்வேலி

**வெளியீடு**
தூண்டி
திருநெல்வேலி



**முகவரி**
அறிவிசை
இல. 141, கேணியடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.


# உள்ளே..


| | |
|---|---|
| நேர்காணல்- நிறைவுப் பகுதி | 04 |
| 44 வருட செவ்வாய்க்கிரக ஆய்வு | 41 |
| சதுரங்கம் பயிற்சிக்களம் பகுதி - 02 | 29 |
| "10,000 மார்க்" பரிசு அறிவிக்கப்பட்ட கணிதப்புதிர் | 08 |
| இலக்கியத்திற்கான நோபல் பரிசு | 44 |
| உயிரியல் முற்றம் | 24 |
| அத்தப்பத்துவின் பெருந்தன்மை | 45 |
| பொதுஅறிவுப் போட்டி | 27 |
| கணிதச்சிக்கல் | 26 |
| உங்களுக்குத் தெரியாத ஒருவர் | 18 |
| பல் துறைத்தகவல்கள் | |
| **நூலகம்** | |
| The beginnings of writing - composition - | 07 |
| அன்புள்ள தியோ | 12 |
| நிழல் | 19 |
| அக்கினிச் சிறகுகள் | 32 |
| ஒரு கவிதை இரு மொழிகளில் - புத்தரின் படுகொலை | 42 |
| இரு நீதிக்கதைகள் | 46 |
| சித்திரப் பாடத்தில் அதிதிறமைச் சித்தி (A) பெறுவது கடினமா? | 12 |

# தகவல் பெட்டகம்

## இலங்கை

1. இலங்கையில் உள்ள தீவுகளில் பெரியவை.................... ஊர்காவற்துறை, நெடுந்தீவு
2. இலங்கைக்கு மேற்கே இருக்கும் தீவுக் கூட்டங்களின் நாடு..........................மாலைதீவு
3. ஆகக்குறைந்த சராசரி வெப்பநிலை உள்ள மாவட்டம்..............................நுவரெலியா
4. ஆகக்கூடிய சராசரி வெப்பநிலை உள்ள மாவட்டம்............................திருகோணமலை
5. கூடுதலான மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்..................................வடமாகாணம்
6. நிலப்பரப்பில் கூடிய மாகாணம்................................வடமத்திய மாகாணம் 10472 $km^2$
7. பரப்பளவு கூடிய மாவட்டம் ..................................................அனுராதபுரம் 7180 $km^2$
8. நிலப்பரப்பில் குறைந்த மாவட்டம் ...........................................கொழும்பு 700 $km^2$
9. இலங்கைக்கு வந்த முதல் ஐரோப்பியர்.........................................மார்க்கோ போலோ
10. இலங்கைக்கு வந்த முதல் அரேபியர்..................................................இபின் பதூதா
11. இலங்கையின் பூர்வீக மாகாணங்கள்.........இராஜரட்டை, மாயரட்டை, உறுகுணரட்டை
12. இலங்கையில் ரூபா சதக்குற்றி நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு...........1872
13. இலங்கையில் தாள் நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு..........................1885
14. தற்போதைய பாராளுமன்றத்தைச் சுற்றி ஓடும் ஆறு .........................தியவன்ன ஓயா
15. ஐ. நா சபையில் இலங்கை உறுப்புரிமை பெற்ற ஆண்டு................................1955

---

## இதயம்

* மனிதனின் மிக முக்கிய உறுப்புக்களில் ஒன்றான இதயம் நெஞ்சுக் கூட்டில் சற்று இடது புறமாகச் சரிந்துள்ளது.
* இவை ஒவ்வொரு மனிதரினதும் கையைப் பொத்திப் பிடிக்கும் அளவு வரும்.
* இதயம் விசேடமான இதயத் தசைகளால் (*Cardiac muscles*) ஆனது.
* மனித இதயம் நான்கு அறைகளைக் கொண்டது.
* ஒரு நிமிடத்திற்கு இதயம் 72 தடவைகள் சராசரியாகத் துடிக்கின்றது. விளையாட்டு வீரர்களுக்குச் சிறிது குறையலாம்.
* எனவே ஒரு நிமிடத்தில் 5 l குருதியைப் பம்புகின்றது எமது இதயம்.
* குருதியிழப்பு நடைபெறும்போது இதயத்துடிப்பு அதிகரிக்கும்.
* இவ்வாறு இதயம் துடிக்கக் காரணம் இதயத் தசைகளில் காணப்படும் மின்னலைக் கடத்தும் தொகுதி (*Conduction system*) ஆகும்.
* இக்கடத்தும் தொகுதியில் ஏற்படும் மாற்றங்களே *E. C. G. (Eletro Cardio Gram)* யில் பதியப்படுகின்றன.
* இதயத்திற்குக் குருதி வழங்கும் கலன்கள் முடியுருநாடி / நாளங்கள் (*Coronary vessels*) என அழைக்கப்படுகின்றன.
* இவற்றில் ஏற்படும் கொலஸ்திரோல் (*Cholesterol*) படிவுகள், படிப்படியாக இருதயத் தசைகளுக்கான குருதி விநியோகத்தைக் குறைத்து இறுதியில் அவற்றின் இறப்புக்குக் (*Myocardial infarction*) காரணமாகின்றன.
* கடத்தும் தொகுதியில் ஏற்படும் குறைகளை ஈடுகட்ட சில மின்னலைப் பிறப்பாக்கிகளை இதயத்தில் பொருத்துவர். (*Pace maker*)

தொகுப்பு இளந்திரையன்

# அட்டைப்பட விளக்கம்

1. 2003 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தால் கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட திரைப்பட இயக்குநர் Dr. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்.

2. உலகில் உள்ள தேனீக்களில் அதிக விஷம் உள்ளது ஆபிரிக்கத்தேனி. (*Apis mellifera scutellata*)

3. *Hippo campus whitei* ன் முட்டையில் இருந்து இளம் கடற்குதிரைகள் வெளியேறி சுயாதீனமாக நீந்துகின்றன. இங்கு ஆண் கடற்குதிரைகளே முட்டையைச் சுமந்து கருவை வளர்க்கின்றன.

4. த பியானிஸ்ட் (*The pianist*) திரைப்படத்தில் அட்ரின் ப்ரோடி (*Adrein Brody*) பியானோ வாசிப்பவராக.

5. 13வயது ட்றோனாவலி ஹரிக்கா (*Dronavali Harika*) இந்தியாவின் மிக இளவயது பெண் சதுரங்க கிராண்ட் மாஸ்டர் (*Youngest Woman Grand Master*)

6. 2003இல் பிரான்சின் கோர்சிக்கா விரைவு சதுரங்கப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் விஸ்வனாதன் ஆனந் மற்றும் அலெக்சாண்டர் கிறிஸ்சுக் (இப்போட்டியில் ஆனந் சம்பியன் பட்டம் பெறுகின்றார்)

7. அழிவு அபாயத்தை எதிர்நோக்கும் உயிரினங்களில் (*Endangered species*) ஒன்றான பொன்னிறத்தேரை (*Golden Toad - Bufo periglenes*) இது இறுதியாக 1988 - 1989 இல் கோஸ்டோறிக்காவில் காணப்பட்டது.

8. செவ்வாயில் தரையிறங்கிய ஸ்பிரிட் விண்கலம் 2003 இல் அனுப்பிய படம்.

9. 1997 இல் செவ்வாயில் தரையிறங்கிய பாத்பைண்டர் அனுப்பிய செவ்வாயின் அழகிய தரைத்தோற்றம்.

**Ping - pong Diplomacy (பிங் - பாங் திறம்)**

பிங்-பாங் என்பது மேஜையில் விளையாடும் சிறிய டென்னிஸ் ஆட்டம். அமெரிக்காவோடு அரசியல் உறவு வைத்துக் கொள்ள விரும்பிய சீனா இந்த விளையாட்டை புத்தி சாலித்தனமாக அறிமுகப்படுத்திக் கொண்டது. 1972-ஆம் ஆண்டில் சீனா இந்த விளையாட்டுப் போட்டிக்கென அமெரிக்காவை அழைத்தது. 1949-க்குப் பின்னா் தொடர்பே இல்லாத இருநாடுகளும் இந்த விளையாட்டின் போதுதான் நெருங்கிப் பழகின.

**Idealism (கருத்தியல் கொள்கை)**

ஒருவனது உள்ளம் சிந்திப்பது போல் இல்லாமல், பிரபஞ்சத்தில் வேறு ஏதேனும் தனிப் பொருள் என ஒன்றும் இல்லை. ஒன்றின் பொருள் என்பது அதன் கருத்தில் இருக்கிறதே தவிர அதன் வெளித்தோற்றத்தில் இல்லை.



# 3A, B பெற்று மருத்துவரான திவாகரன் உடனான நேர்காணல்

– துவாரகன்

நிறைவுப் பகுதி

கேள்வி **கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று மருத்துவ மாணவனாக இருந்தகாலத்தில் உங்கள் அனுபவங்கள், செயற்பாடுகள்?**

பதில் 1997ம் ஆண்டு கொழும்பு மருத்துவப்பீடம் சென்றேன். கொழும்பு மருத்துவப்பீடம் என்னை மிகவும் செம்மைப்படுத்திய இடம். மாணவர்களைச் சிறந்த மருத்துவராக மட்டுமன்றி, வாழ்க்கையில் வளமான மனிதராக மாற்றும் கல்வித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. நிறைகுறைகள் இருக்கின்றன இலங்கையில் ஒரு தனித்துவமான, சிறந்த மருத்துவக் கல்வியை அது பெற்றுத்தந்தது. எமது இந்துமன்றத்தில் பத்திராதிபராக இருந்துள்ளேன். எமது காலம் மிகச் சுவாரசியமாக இருந்தது. அதேவேளை சர்ச்சைக்குரியதாகவும் இருந்தது. எமது அணியுடன், எமது பீடத்தில் பகிடிவதை (Ragging) முற்றாக ஒழிக்கப்பட்டது. (இன்றைய நிலைபற்றி எனக்குத் தெரியாது). இதனை (Ragging) ஒழிப்பதற்கு நாம் மிகுந்த மனத்துணிவு கொள்ள வேண்டியிருந்தது. பல துன்பங்களுக்கு ஆட்பட்டோம்.

கேள்வி **இன்று யாழ்ப்பாணத்தில் பல மாணவர்கள் நல்ல திறமையிருந்தும் போதிய ஆங்கில அறிவு இன்மையால் முன்னேற முடியாமல் உள்ளனர். பட்டப்படிப்புக்களில் மிகவும் சிரமப்படுகின்றனர். யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியை இடைநடுவில் விட்டு சென்றுள்ளனர். கல்லூரி நாட்களிலேயே ஆங்கில மொழியில் கட்டுரை எழுதி பரிசு பெற்றிருக்கின்றீர்கள். சிறுவயது முதல் எத்தகைய கற்றல், கற்பித்தல் சிறந்தது?**

பதில் மொழி அறிவு அல்லது ஆளுமை ஒருவர் எவ்வளவு இளமையில் அதனைப்பயில்கின்றாரோ அவ்வளவுக்கு ஆழமாகும். இலங்கையில் கல்வியில் அரசியல் சித்தாந்தங்கள் செலுத்தும் செல்வாக்கினால் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் ஒன்றாக இதனை நான் கருதுகின்றேன்.

தாய் மொழியைக் கட்டாயமாக்குவது வளர்ப்பது என்பது வேறு. ஆங்கிலமொழியின் முக்கியத்துவத்தைக் குறைப்பது என்பதுவேறு. நிச்சயமாக எமது ஆங்கிலப்புலமை எமது சந்ததியில் மிகவும் குறைந்துவிட்டது. எனது ஆங்கிலப்புலமை கொழும்பில் கல்விகற்ற எனது சில பிற மொழி நண்பர்கள் முன்நிலையில் ஒப்பிடும் பொழுது குறைவு. ஆதனால் சில இழப்புக்கள் (பரீட்சைப் புள்ளிகளில்) ஏற்பட்டிருக்கலாம். பல திறமையான தமிழ் ▶

மாணவர்கள் (என் நண்பர்கள்) இதனால் பாதிக்கப்படுவதைக் கண் கூடாகக் கண்டுள்ளேன்.

வெறும் வீம்புக்காக ஆங்கிலத்தினை இரண்டாம் பட்சமாக்கி, இன்று இரண்டும் கெட்டானாக இருப்பது கவலை தருகின்றது. தமிழ் மீது எனக்குத் தளராத பற்றுண்டு. ஆனால் தமிழில் எமது உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்பு (விஞ்ஞான, முகாமைத்துவ, மருத்துவத்துறைகளில்) இருக்கின்றதா? அதனை உறுதிசெய்ய முடியாதாயின் சிறுவயதிலேயே உண்மையைக் கூறி ஆங்கிலத்தை முதன்மையாகக் கற்பிக்க வேண்டும்.

தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமெனில் முதலில் தமிழில் கலைச் சொற்களை ஆக்கி தமிழையும் தற்கால விஞ்ஞான மொழியாக வளர்க்கலாம். ஒரு மொழி நன்கு வளரவேண்டுமெனில் அது தனிமனிதனுக்கு உழைப்பைக் கொடுத்து, உணவைக் கொடுக்கும் மொழியாக இருக்க வேண்டும். விஞ்ஞான உலகில் உழைப்பிற்குரிய மொழியாக ஆங்கிலம் இருக்கையில், தமிழ் வெறும் அலங்கார மொழியாகவே இருக்கின்றது - சமஸ்கிருதம் போல. பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள் ஆங்கிலத்தில்தான் கற்பிப்பார்களெனின் ஏன் அதனை மழலையிலேயே கற்பிக்கக் கூடாது "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் பயனில்லை. திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதனை வணங்கச் செய்தல் வேண்டும்."

ஆங்கிலத்தில் அதிதிறமைச்சித்தி (D)எடுப்பது என்பது ஆங்கில அறிவல்ல! (தற்போது A) ஆங்கிலத்தில் சரளமாக உரையாடி பிறர் பேசுவதை விளங்கிக் கொள்ள நூல்களை வாசிக்க வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. எனவே உங்களுடனேயே உரையாடுங்கள். தவறெனினும் பரவாயில்லை. வெட்கப்படாது உரையாடுங்கள். சுயமாக நூல்களை வாசியுங்கள். அதனை அப்படியே விளங்குங்கள்................................. நான் ஆங்கிலத்தில் கனவு காணவேண்டும் என்று அவாவினேன் இன்று இது என்னால் முடியும். கனவுகள் ஆழ்மனதில் இருந்து வருவன. கனவில் ஆங்கிலம் பேசமுடியுமாயின் நனவிலும் முடியும்.

இன்று பல ஆங்கில ஆசிரியர்களுக்கு சரளமாக ஆங்கிலம் பேசவராது என்பது நான் கண்கூடாகக் கண்ட உண்மை. (How sad is our plight?)

கேள்வி **சிறுவயது முதலே உரையாடுகின்ற போது குரல் ஒலி தடைப்பட்டு சிரமப்பட்டீர்கள் ஆனால் அதையும் மீறி கல்லூரி நாட்களில் சிறந்த சொற்பொழிவுகள் வழங்கியிருக்கின்றீர்கள் எவ்வாறு முடிந்தது?**

பதில் ஆம். திக்குவாய் என்ற குறைபாடு அன்றுமட்டுமல்ல இன்றும் எனக்கு உள்ளது. திக்குவாய் பற்றி பூரணமாக அறிந்தால் இது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல. பாடசாலையில் மட்டுமல்ல, பல்கலையிலும் நான் மேடைப் பேச்சில் வல்லவன். ஒரு வேளை பேசவேண்டும் என்னாலும் பேசமுடியும் என்ற வெறியை இக் குறைபாடு என்னுள் ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் எந்த வில்லங்கங்களையும் விரட்டும் என நான் நம்புகின்றேன்.


பாடகர் பாத்தியா

இலங்கையின் சிறந்த சிங்கள மொழிப் பாடகர் பாத்தியா ▶

(Bathiya) இப்படியான குறையுள்ளவர். ஆனால் இக் குறையால் நான் வாழ்க்கையில் இழந்தது ஏராளம். பாடசாலையிலும் சரி என்னைப் பூரணமாக வெளிப்படுத்த முடியாத மாயை போன்றே இதனை நான் கருதுகின்றேன். இக்குறைபாட்டின் விளைவுகளைத் தகுந்த சிகிச்சை மூலம் (மிக இளம் வயதில்) மிகவும் குறைக்கலாம். இது பற்றி உதவி தேவைப்படுவோர் யாழ் உளவளத்துணையாளர்களை, உளநலச் சங்கத்தில் (தெல்லிப்பழையில்) அல்லது சாந்திகம், போதனாவைத்தியசாலை போன்ற இடங்களை நாடுவது நல்லது. கொழும்பில் இதற்கென சிறந்த பயிற்றப்பட்ட Speech Therapist உள்ளனர்.

**கேள்வி** **எப்படியான ஆசிரியர்களை விரும்புகின்றீர்கள்? அவர்கள் எப்படியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?**

**பதில்** ஆசிரியர்களை என்றும் மதித்துள்ளேன். எனினும் அவர் பற்றிய எண்ணங்கள் காலத்துடன் மாற்றமடைந்து உள்ளன. ஆரம்பத்தில் ஆசிரியர் என்பவர் "சந்தேகம் தீர்க்கவும், ஒழுக்கம் கற்பிக்கவும், பரீட்சையில் எம்மை மதிப்பிடவும்" தேவை. ஆனால் என் கற்றலினை அவர் தீர்ப்பிட முடியாது என நம்பினேன்.

பின்னர் அவர்கள் எவ்வாறு கற்றலார்வத்தையும், தன்னம்பிக்கையையும் நிலைநிறுத்தி முன்னேறலாம் என (A/L) இல் உணர்ந்தேன். திரு. கெங்காதரன் ஆசிரியர் (விலங்கியல்), திரு. சண்முகேஸ்வரன் ஆசிரியர் (பௌதீகவியல்) ஆகியோரை இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும். அதிபர் தொட்டு ஆசிரியர் வரை அனைவருமே (Invariably) என்னை ஊக்குவித்துள்ளனர்.

(A/L) இல் ஒரு பிரபல ஆசிரியரிடம் கற்றிருப்பின் Botany (தாவரவியல்) இல் இலகுவாக "A" (நான் "B" பெற்றேன்) பெற்றிருக்கலாம் என என் நண்பர்கள் கூறுவர். May be (அவ்வாறு இருக்கலாம்) ?

ஆசிரியர்கள் சிறந்த வழிகாட்டிகள் (Guide lights) என இப்பருவத்தில் உணர்ந்தேன். சிறு வயதில் திருமலையில் என் கவிதைகளைத் திருத்தி தமிழ் படிப்பித்த ராணிரீச்சரும், எனக்கு Chess கற்பித்த திரு வாமதேவன் (Engineer) உம், என் எழுத்தைத் திருத்தமுயன்று தோற்ற திரு. சேனாதிராசாவும் என் மனதில் நிற்கின்றனர்.

ஆனால் இன்று ஆசிரியர் என்பவர் ஒரு முன்னுதாரணம் (An example) என நம்புகின்றேன். இக் கருத்து ஏற்பட எனது பல்கலைக் கல்வியும், Dr. சேனக்க ராஜபக்சஷ வும், தற்போது எனது மேலதிகாரியான மனோதத்துப் பேராசிரியர் என்போர் ஒரு பிந்திய காரணம்.

ஆசிரியர்கள் கல்வியில், அறிவில், நடத்தையில், ஒழுக்கத்தில் மாணவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழவேண்டும். கற்பித்தலைவிட இது முக்கியம்.

அதேவேளை மாணவர்கள் ஆசிரியர்களை விமர்சிக்கக் கூடாது. அவ்வேலை அதிபருக்கும், பெற்றோருக்கும் உரியது. மாணவர் முதலில் ஆசிரியரைத் திருத்தாது அவர் சொற்படி ஒழுகவேண்டும். குரு நிந்தனை தெய்வ நிந்தனை. ■

## THE BEGINNINGS OF WRITING - COMPOSTION -

ஆங்கிலத்தைக் கற்கும் ஆரம்ப நிலையிலுள்ள மாணவர்களுக்கு சில புத்தகங்கள் உதவியாக இருக்கும். அந்தவகையில் ஆங்கில ஆசிரியர் த. ந. பஞ்சாட்சரம் என்பவரால் ஆண்டு 6, 7, 8, 9 மாணவர்களுக்கென எழுதப்பட்ட The beginnings of writing composition என்ற புத்தகம் சிறியவர்களுக்கு மட்டுமன்றி ஆங்கிலத்தைக் கற்கின்ற வளர்ந்தவர்களுக்கும் பயன் மிக்கது. இந்நூலில் தரப்பட்டுள்ள பயிற்சிகள் மாணவர்களுக்கு ஆர்வத்தை தூண்டும் வகையிலும், மிகவும் எளிய மொழிநடையில்- இலகுவில் வாசித்து புரிந்து கொள்ளக் கூடியவாறு எழுதப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.




இந்நூல் பற்றி ஆசிரியர் சுருக்கமாகக் குறிப்பிடுகையில் தெரிவிக்கும் ஒரு விடயம் "உமக்குத் தெரிந்த விடயம் பற்றி ஆங்கிலத்தில் சில வார்த்தைகளை உம்மால் எழுதமுடியுமா? முடியாதிருப்பின் இந்நூல் உமக்கு உதவியாக இருக்கும்." இதற்கேற்ப அத்தியாயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு வாக்கியங்கள், வினாக்கள், கட்டுரை, கடிதங்களில் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நூலிலிருந்து ஒரு சிறுபகுதி,

*The letter inviting a friend to one's birthday.*

*Address*

*Dear Ramesh,*

*You will be **delighted** to recevie this letter. My birthday is on Sunday. I am not observing it in a big way. It will be very simple and quiet. I am inviting a few only. You are one. I like to see you by 4 p.m. No **presents** please. I want only your **presence**. My Pa and Ma will very much like to see you. So do come.*

*Thank you.*

*your friend,*

*Saravanan.*

63 பக்கங்களைக் கொண்ட இந்நூலை ஒரு தடவை வாசிக்கும் ஆங்கிலம் கற்கும் எந்த மாணவனும், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியரும், 'The beginnings of writing composition', மாணவர்களுகாக அர்ப்பணிப்புடன் செய்யப்பட்ட பெரிய பணி என்றே உணர்வர்.

(It is a great work with dedication done for our tamil students.)

***சமந்த, தூயவன் - N. C. E. மாணவர்கள்***

**Aestheticism (அழகியல்)**

அழகுணர்ச்சியை மற்ற வாழ்வியல் நெறிமுறைகளின்றும் முதன்மைப் படுத்தி கலை, இலக்கியங்கள், ஓவியங்களில் வெளிப்படுத்தும் போக்கு. கேதே, ஷில்லர், காலர்ட்ரிஜ், கார்லைல் போன்றோரின் படைப்புக்களில் இதைக்காணலாம்.

## ‘10,000 மார்க்’ பரிசு அறிவிக்கப்பட்ட கணிதப்புதிர்

### புத்தகத்தின் மூலையில் இருந்த குறிப்பு

1900 ஆகஸ்ட் மாதம் 8 ஆம் தேதி பாரிஸில் இரண்டாவது அகில உலக கணிதவியல் மாநாடு, நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் இம் மாநாட்டிற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கணித அறிஞர்கள் வந்திருந்தனர்.

38 வயதே ஆன டேவிட் ஹில்பர்ட் (David Hilbert) என்ற கணித அறிஞர் அன்று ஒரு முக்கிய உரையாற்றினார்.

அடுத்த 50 ஆண்டுகளுக்கும் மேல் பலமுறை மேற்கோள் காட்டப்பட்ட மிக முக்கியமான உரை அது.

அவர் அந்த உரையில் பலகாலமாக கணித அறிஞர்களின் பிடிக்குச் சிக்காமல் நழுவும் 23 கணித பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டினார். இப்பிரச்சனைகள் கணிதவியலுக்கு மிகப்பெரிய சவால் என்று குறிப்பிட்டார்.

அதில் ஒரு சவாலாக அவர் குறிப்பிட்டது பெர்மாட்டின் கடைசித் தோற்றம். 1630ல் தோன்றிய இந்த கணிதப் பிரச்சனையின் ஆரம்பம் மிகச் சுவையானது.

பெர்மாட் தொழில் முறையில் ஒரு வழக்கறிஞர். கணிதம் அவரின் பொழுதுபோக்குத்தான். பொழுதுபோக்காக கணித ஆய்வுகளை மேற்கொண்ட அவர், கணிதவியலின் பல்வேறு சிக்கல் நிறைந்த பகுதிகளில் பல புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தினார். வரை கணிதம், கால்குலஸ், நிகழ்தகவு கோட்பாடுகள் முதலிய கணிதவியலின் பகுதிகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டார்.

தான் ஒரு முழு கணிதவியல் ஆராய்ச்சியாளர் இல்லை என்றும் ஆகவே, தான் பல தவறுகளை இழைக்கக்கூடும் என்றும் கருதி தனது ஆய்வுகளின் முடிவுகள் பலவற்றைப் பிரசுரிக்கவே இல்லை.

1453 இல் கொன்ஸ்டாண்டிநோபிள் துருக்கியர்களின் பிடியில் சிக்கயது. அப்பொழுது கொன்ஸ்டாண்டிநோபிளில் இருந்த பல அறிஞர்கள் ஐரோப்பாவில் புகலிடம் தேடி ஓடினர். அவ்வாறு புகலிடம் தேடி வருகையில் பல பண்டைய ஆராய்ச்சி சுவடுகளை எடுத்து வந்தனர். பண்டைய கிரேக்க ஆராய்ச்சி ஏடுகள் பலவும் அதில் அடங்கும். அதில் ஒன்று டையோபான்டஸ் (Diophantus) எழுதிய “அரித்மெதிகா” எனும் புத்தகம். இந்தப் புத்தகம் 1621 இல் ஐரோப்பாவில் மறுவெளியீடாக வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தைப் படித்த பின்னரே பெர்மாட் எண் கணிதத்தில் ஆர்வம் செலுத்தத் தொடங்கினார்.



பெர்மாட்

“அரித்மெதிகா” வில் இருந்த ஒரு சுவையான பிரச்சனை பெர்மாட்டின் கவனத்தை ஈர்த்தது.

$3^2 + 4^2 = 5^2$ என்பதை நாம் பார்க்கலாம். ஆனால் இதேபோல் மூன்றுபடிகள் உயர்த்தப்பட்ட எண்கள் ஏதாவது இரண்டின் கூட்டுத்தொகை மறுபடியும் வேறு எண்ணின் மூன்று படியாக இருக்குமா என்பதே பிரச்சனை.

அதாவது $X^3 + Y^3 = Z^3$ என்ற முறையில் $X, Y, Z$ என்ற மூன்று எண்களைக் கண்டுபிடிக்க முடியுமா?

$X$ க்கு ஒரு மதிப்பும் $Y$ க்கு ஒரு மதிப்பும் எனப் பல எண்களுக்குக் கொடுத்துக் கணக்கிட்டு வரும் விடை ஏதாவது ஒரு எண்ணின் மூன்று படியா எனப் பார்க்கலாம். ஆனால் இது முடிகிற காரியமா? எவ்வளவு எண்கள் உள்ளன. எண்ணிலடங்கா எண்களை இவ்வாறு செய்து பார்க்கவா முடியும்? நவீன கம்யூட்டர்களைக் கொண்டு இப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முயன்றாலும் சாத்தியமில்லை. எண்கள் எண்ணிலடங்காதவை அல்லவா?

வேறுபல கணிதவியலின் தோற்றங்களைக் கொண்டு

$X^3 + Y^3 = Z^3$

▶

என்ற சமன்பாட்டிற்குத் தீர்வு இல்லை என நிருபித்தார். இத்துடன் நிற்கவில்லை. இதிலிருந்து பொதுமைப்படுத்தி $X^4 + Y^4 = Z^4$ ; $X^5 + Y^5 = Z^5$ என்று இரண்டு படிகளுக்கு மேல் எதற்கும் தீர்வு இல்லை எனக் கூறினார். "அரித்மெதிகா" புத்தகத்தைப் படிக்கும் பொழுது பெர்மாட் அந்தப் புத்தகத்தின் ஓர் மூலையில் "இந்த விசயத்தில் $X^n + Y^n = Z^n$ என்பதற்கு $n$-இரண்டுக்கு மேல் இருக்கும் பொழுது தீர்வு இல்லை என்பது எனக்குத் தெரியும். அதற்கான நிருபணத்தை இந்தச் சிறிய இடத்தில் எழுத முடியாது" என்று குறிப்பிட்டிருந்தார். வேறு எவருக்கும் இதைப் பற்றி எழுதவில்லை. வேறு எங்கும் முழு நிருபணத்தைக் குறிக்கவும் இல்லை.

1847 இல் லெமே (Lame) என்ற உலகப் புகழ் பெற்ற கணித அறிஞர் பாரிஸ் அகாதெமியில் 'இதோ தீர்வு' என்று அறிவித்து தீர்வைப் படிக்கத் தொடங்கினார். அவர் முடித்ததும் தன்னுடைய ஆய்வுக்கு வித்திட்டதாக ஜோஸப் லியுவிலியின் (Joseph Liouville) ஆய்வைச் சுட்டிக்காட்டினார். அந்த அறிஞர் குழாமிலேயே இருந்த லியுவிலி இந்தத் தீர்வில் இருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்டினார். லெமேக்கு நிகழ்ந்தது போல் இவ்வாறு இதுவரை பல உலகப் புகழ் பெற்ற அறிஞர்களது முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளது.

பெர்மாட் தன் குறிப்பில் 'தீர்வு எனக்குத் தெரியும்' என்று குறிப்பிட்டிருப்பதால் உண்மையில் தீர்வு இருக்கும் எனப் பல கணித அறிஞர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் தீர்வைத் தேடி ஆய்வு நடாத்தித் தோல்வி அடைந்த வரலாறும் உண்டு.

இன்று மிகச் சக்தி வாய்ந்த நவீன கம்யூட்டர் கூட இதன் தீர்வை அறிய பிரயோகித்துப் பார்த்தாகி விட்டது.

பெர்மாட் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முதல் அறிஞருக்குத் ஜேர்மனியின் கோற்தின்சன் (Gotteingen) நகரில் உள்ள பல்கலைக்கழகம் 10,000 மார்க் தொகை பரிசாக அளிப்பதாக 1908 இல் அறிவித்தது. கி.பி. 2007 வரை நூறு ஆண்டுகளுக்குப் பரிசு அறிவிப்பு இருக்கும் என்று அறிவித்தது.

இன்றைக்கும் ஏராளமான கட்டுரைகள் பல்வேறு பகுதியிலிருந்து கோற்தின்சன் பல்கலைக்கழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இன்றுவரை இப்பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. நீங்களும் கூட இதற்குத் தீர்வு காண முயற்சிக்கலாம். பெரும்பாலும் நீங்களும் கூட தோல்வியைச் சந்திக்கக் கூடும். ஆனாலும் என்ன கணிதப் பிரச்சனைக்குத் தீர்வு காண முயலும் செயலே இன்பமான விஷயம்தானே ஆனால் அப்படி முயற்சி செய்து நீங்கள் வெற்றி பெற்று விட்டால் .....

யாழ்ப்பாணத்தில் கூட முயற்சி செய்து தோல்வியடைந்த மாணவர்கள் இருக்கின்றனர்.

*பெர்மாட்டின் கடைசித் தேற்றத்திற்கு எண்களின் கணிப்பு முறையால் நிறுவியோரும் அவர்கள் அடைந்த இலக்கும். (n இன் வலு)*

| ஆண்டு | நிறுவியோர் | வலு |
|---|---|---|
| 1640 | Fermat | 4 |
| 1753 | Euler | 3 |
| 1825 | Dirichlet and Legendre | 5 |
| 1839 | Lame | 7 |
| 1847 | Kummer up to | 36 |
| 1857 | Kummer up to | 100 |
| 1937 | Vandiver up to | 617 |
| 1976 | Wagstaff up to | 125,000 |
| 1992 | Buhler up to | 4,000,000 |

உதவி — அணுவிலிருந்து ஆகாயம் வரை
— இணையத்தளம்.

# கடற்குதிரை

**கலாநிதி பத்மினி கிருஷ்ணராஜா**
தலைவர், விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

உயிரங்கிகளின் வாழ்க்கையில் எண்ணற்ற வியத்தகு புதுமைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு அங்கியும் தமது தற்சிறப்பான வாழ்க்கை முறை மூலம் தம் மினத்தை அழிவில் இருந்து காத்துக் கொள்வதுடன் இயற்கையுடன் ஒட்டி உறவாடுகின்றன. இந்த வகையில் கடல் வாழ்க்கைக்குரிய கடற்குதிரை (*Sea horse*) எனப்படும விலங்கு பல விநோதமான சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது. *Hippocampus* என்ற விஞ்ஞானப் பெயரைக் கொண்ட கடற்குதிரை மீன்களின் வகுப்பினுள் பின்வரும் பாகுபாட்டு நிலையில் காணப்படுகின்றது.



| | |
|---|---|
| Kingdom | : *Animaliae* |
| Phylum | : *Chordata* |
| Subphylum | : *Vertebrata* |
| Super class | : *Gnathostomata* |
| Class | : *Osteichthyes* |
| Sub class | : *Actinop terigii* |
| Infra class | : *Teleostei* |
| Super order | : *Acanthopterigi* |
| Order | : *Syngnathiformes* |
| Family | : *Syngnathidae* |
| Genus | : *Hippocampus* |

உலகம் முழுவதும் பரந்துள்ள ஏறத்தாழ 35 இனங்களும் *Hippocampus* என்ற ஒரே சாதியினுள் அடக்கப்படும்.

கடற்குதிரையின் வடிவம் தனித்துவமானது. இதன் முகம் நீட்டப்பட்டு தலை குதிரையின் தலையை ஒத்திருப்பதுடன் உடலுக்குச் சாய்வாக ஒரு கோணத்தில் காணப்படும். மேலும் உடல் வில் போன்று வளைந்து காணப்படும். இத்தகைய அமைப்பு இதற்கு குதிரை போன்ற தோற்றத்தைத் தருவதனால் இதைக் கடற்குதிரை என்பர். இதன் வால் ஆதாரத்தைப் பற்றிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்ததாக இருப்பதுடன் இதன் நுனியில் வாற்செட்டை இருப்பதில்லை. ஏனைய மீன்களைப் போன்று இது கிடையாகக் காணப்படுவதில்லை. மாறாக வாலினால் ஆதாரத்தைப் பற்றியவாறு நிலைக்குத்தாகக் காணப்படும். இதன் உடல் செதில்களுக்குப் பதிலாக என்புத்தட்டுக்களினால் மூடப்பட்டிருக்கும்.

கடற்குதிரைகள் முருகைக்கற்பார், கடற் புற்படுக்கை, கண்டற்சதுப்புச் சூழல் ஆகிய வாழிடங்களில் அதிகமாகக் காணப்படும். அநேக கடற்குதிரையினங்கள் தாம் வாழும் சூழல் நிறத்திற்கேற்ப வெண்மை, மஞ்சள், சிவப்பு, ஊதா, பச்சை என தமது உடல் நிறத்தை மாற்றிக் கொள்ளக் கூடியவை. மேலும் தமது உடலிலிருந்து வெளிக் கவர்ச்சிகளை உருவாக்குவதன் மூலம் தாவரங்களைப் போல பொய்த்தோற்றம கொள்கின்றன. இவற்றின் மூலம் பெரிய மீன்கள், நண்டுகள், நீர்ப்பறவைகள் போன்ற இரை கௌவிகளிடமிருந்து தப்புகின்றன.

▶

கடற்குதிரைகள் இடம்பெயர்வதற்கு வாலையும் முதுகுப்புறச் செட்டையையும் பயன்படுத்தும். இவை கிறஸ்தேசியன் குடம்பிகளையும் ஏனைய விலங்குப் பிளந்தன்களையும் உணவாகக் கொள்ளும். உறிஞ்சி (Syringe) போன்ற தமது நீள்மூஞ்சியினால் இவ்வுணவை சடுதியாக உறிஞ்சிக் கொள்கின்றன.

ஆண் கடற்குதிரைகள் பெண்களைவிட மூர்க்கத்தனம் உடையனவாகவும், தெளிவாக அடையாளம் காணக்கூடியதாகவும், பல்வேறு நிறங்களைக் கொண்டதாகவும் ஒலி எழுப்பக் கூடியதாகவும் உள்ளன. கடற்குதிரைகளின் முக்கிய சிறப்பியல்பாக ஆண்களே கர்ப்பமடைந்து குட்டியீனுகின்றமையைக் குறிப்பிடலாம். ஆண்களின் வயிற்றுப் புறத்தில் வாலின் ஆரம்பஸ்தானத்தில் முட்டைப் பை (Brood pouch) எனப்படும் அமைப்பு காணப்படும். புணர்ச்சியின் போது பெண் விலங்கு இதனுள் முட்டைகளை இடுகின்றது. இம்முட்டைகள் முட்டைப் பையினுள்ளேயே விருத்தியடைகின்றன. முட்டை பொரித்து வெளிவரும் குஞ்சுகள் மேலும் சில நாட்களுக்கு முட்டைப் பையினுள் வளர்ச்சியடைகின்றன. பின் இளம் கடற்குதிரைகள் முட்டைப்பையிலிருந்து வெளியேறி (படம்) முதுகுப்புறச் செட்டையின் உதவியுடன் சுயாதீனமாக நீந்த ஆரம்பிக்கின்றன. இத்தகைய இளம் கடற்குதிரைகள் சூழல் நிலமைகளால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. அதாவது இவை கொந்தளிப்பான நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்படலாம் அல்லது பெரிய விலங்குகளினால் இரை கொள்ளப்படலாம்.

கடற்குதிரைகள் மருந்துப்பொருட் தயாரிப்பு, அலங்கார நீர்வளர்ப்பு, உணவுப்பொருள் போன்ற பொருளாதார முக்கியத்துவமுடையன. இதனால் இவை உயிருடனோ அல்லது இறந்த பின்போ பெருமளவில் சட்டரீதியான வர்த்தகத்திற்குட்படுகின்றன. பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, பிரேசில், சீனா, இந்தோனேசியா, குவைத், மலேசியா, மெக்சிக்கோ, சிங்கப்பூர், ஸ்பெயின், தன்சானியா, தாய்லாந்து, வியட்நாம், போன்ற நாடுகள் இவற்றை ஏற்றுமதி செய்கின்றன. கடற்குதிரைகளுக்கு தலைவழுக்கை ஏற்படுவதைத் தடுக்கும் சக்தி உண்டென சீனர்களும் ரோமானியர்களும் நம்புகின்றனர். மேலும் முட்டு, இதயநோய்கள் பாலியற் பிரச்சனைகள் போன்றவற்றை குணமாக்கும் மருந்துத் தயாரிப்பில் இவை பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான பொருளாதார நோக்கங்களுக்காக கடற்குதிரைகள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதனால் இவற்றின் குடித்தொகை வேகமாக குறைந்துகொண்டு வருவதாக ஆய்வாளர் தெரிவிக்கின்றனர். எனவே நின்று நிலைத்திருக்கக்கூடிய வகையில் இவற்றை பயன்படுத்தத் தக்கதாக திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஏற்கனவே இயற்கை வாழிடங்களில் உள்ள கடற்குதிரைகள் அழியாது பாதுகாப்பதுடன் செயற்கையாக நீர்வளர்ப்பு (Aquaculture) முறை மூலம் இவற்றின் குடித்தொகையை அதிகரிக்கலாம்.

*Hippocampus whitei* இன் முட்டைப்பையில் இருந்து இளம் கடற்குதிரைகள் வெளியேறி சுயாதீனமாக நீந்துகின்றன.




உசாத்துணை:-

1. Vincent, A(1993). The improbable sea horse, National Geognaphic: 186(04): 126-140.
2. Yong, J.Z-(1981). The life of Vertebrates, ELBS,London.

## வினாவும் பதிலும்

தா. சனாதனன்

**கேள்வி**

(சா/த) அல்லது (உ/த) க்கு பள்ளிக்கூடங்களில் சித்திரப் பாடம் கற்பது கடினம் என்ற சூழல் காணப்படுகின்றதே? இது எதனால்? பாட விதானத்தில் உள்ள குறைபாடா?

**பதில்**

சென்ற இதழில் தமிழர்களிடையில் அல்லது யாழ்ப்பாணத்தில் ஓவியர்கள் உருவாகவில்லை என்ற கேள்விக்கான எனது பதிலில் இங்கு ஓவியம் என்பது எவ்வாறு வகுப்பறைப் பாடமாகவும், ஆசிரிய தொழிலாகவும் முடக்கப்பட்டுள்ளது என்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இலங்கையில் முதல் நவீன ஓவிய இயக்கமான 43 குழு கொழும்பில் 1943ல் ஆரம்பமானது. ஆனால் இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே வின்சற் கலைக்கழகம் என்பது யாழ்ப்பாணத்தில் தொடக்கப்பட்டிருந்தது. இதில் சுவாரசியம் என்னவென்றால் இது முன்னையதைப் போல ஓவியர்களுக்கான இயக்கமாக அல்லாமல் ஆசிரியர்களை உருவாக்குவதற்கான கழகமாகவே அமைந்தது என்பதாகும். இதன் பின்னர் இன்றுள்ள வட இலங்கை நுண்கலை சபை, யாழ்பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை வரை பல நிறுவனங்கள் ஆசிரியர்களை உருவாக்க வேண்டி அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்களின் நோக்கங்களின் சான்றாக அவற்றின் பாடத்திட்டம் அமைந்துள்ளதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். இவற்றுக்கு மேலதிகமாக ஆசிரியர் கலாசாலையும், கல்விக்கல்லூரியும் சித்திர ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சியை வழங்குகின்றன. இந்தச் சூழலில் சித்திரப் பாடத்தைக் கற்றல் பிரச்சனைக்குரியது என்ற அனுபவமும், அபிப்பிராயமும் நிலவுவது ஆச்சரியமான ஒன்றாகக் கூறப்படலாம். இன்று ஆங்கிலத்தைப் போல வடக்கு - கிழக்கு பள்ளிக்கூடங்களில் பின் தங்கிய பாடமாகவே சித்திரமும் நோக்கப்படுகின்றது.

பலவேறு நாடுகளினதும் பாடத்திட்டங்களில் ஆரம்பக் கல்வியிலிருந்து மாணவர்களின் ▶

## நூலகம்

### அன்புள்ள தியோ வான்காவின் கடிதங்கள்



*ஒரு கலைஞனுக்குத் தனது நோக்கைப் பகிர்ந்து கொள்ள ஒருவர் கிடைத்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும். வின்செட் வான்கோ அதிஷ்டசாலி. தியோ கிடைத்திருக்கிறார். அன்புள்ள தியோ என்று தொடங்கும் கடிதங்கள் வான்கோவின் மனதை அப்படியே வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. தனக்கு வாழ்வில் கிடைத்த அனுபவங்களை படமாக மட்டுமல்லாது, கடிதங்களாகவும் வரைந்து தள்ளியிருக்கிறார் வான்கோ. சிறந்த கலைஞர்கள் ஏழைகளாகவே இருப்பது சோகம்தான். வான்கோவும் வறுமையால் வாடுகிறார். ஆனால் எப்போதும் இயற்கையை இரசிக்க மட்டும் தவறவில்லை. தற்கொலை செய்ய முதல் எழுதிய கடிதத்திலும் ஓவியம் பற்றியே எழுதியிருக்கிறார். ஒரு ஓவிய மாமேதையின் வாழ்க்கையை ஓவியமாக விரிக்கின்றது "அன்புள்ள தியோ"*

கற்பனை ஆற்றலையும், வினைத்திறனையும் வளர்க்கும் ஓர் வழிமுறையாக காண்பிய ஊடகங்களின் பயிற்சி அமைந்துள்ளது. எனினும் பல்கலைக்கழக அல்லது தொழில் கல்வி மட்டத்தில் காண்பியக் கலையானது அதன் தேவையையும் நோக்கத்தையும், ஊடக சாத்தியப்பாட்டினையும், உளவியல் அணுகுமுறையையும் பொறுத்து பல சிறப்பு கற்கை நெறிகளாக கற்பிக்கப்படுகின்றது. அவையாவன,

(1) ஓவியம் (Painting)
(2) சிற்பம் (Sculpture)
(3) பதிப்போவியம் (Print making)
(4) வடிவமைப்பு (Design)
(5) பிரயோக ஓவியம் / வர்த்தக ஓவியம் (Applied art / Commercial art)

இவற்றை விட கலை வரலாறு (Art history) கலை விமர்சனம் (Art criticism) என்பனவற்றுடன் எதிர்கால சித்திர ஆசிரியருக்கான சித்திரக் கற்பித்தல் (Art Teaching) இவை பட்டப்படிப்பு, பட்டமேற் படிப்பு நிலை வரை பயிலப்படத்தக்கன.

இலங்கையில் பாடசாலைகளின் சித்திரப்பாட விதானமானது மேற் சொன்ன சிறப்புப் பயிற்சிகளுக்கான அடிப்படைப் பயிற்சியையும், புரிதலையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. அந்த வகையில் அதில் செய்முறையும் கோட்பாடும் (Theory) உள்ளடக்கப்பட்டுள்ளது. செய்முறையில்

(1) நிலைப் பொருட் கூட்டத்தை பார்த்து வரைதல்
(2) கற்பனைப் படவாக்கம்
(3) முப்பரிமாண அல்லது இரு பரிமாண வடிவமைப்பு

என்பனவும், கோட்பாட்டில் ஓவியம், சிற்பம், கட்டடம், பதிப்போவியம் என்பன சம்பந்தப்பட்ட வரலாறும், உத்திமுறைகள், ஊடகங்கள் (Methods & Materials) பற்றிய மிகவும் அடிப்படையான விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் கோட்பாடும், செயல் முறையும் ஒன்றிலிருந்து ஒன்று விஞ்ஞானத்தைப் போல பிரிக்க முடியாதனவாக இருப்பதுடன் ஒன்றைவிட்டு மற்றதைப் புரிந்து கொள்ள முடியாதனவாகவும் உள்ளன. பரீட்சை என்ற ரீதியில் மாணவன் ஒருவன் கோட்பாடு பற்றிய வினாப்பத்திரத்திற்கும் நிலைப் பொருட்காட்சியைப் பார்த்து வரையும் செயன்முறைக்கும் கட்டாயம் தோற்ற வேண்டியும் கற்பனைப் படவாக்கம் அல்லது வடிவமைப்பில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றான். இந்த அடிப்படையில் மாணவர்களின் அவதானம், காட்சி ஞாபகம் (Visual memory) கற்பனையாற்றல், பிரயோகிக்கும் திறன், செயல் நுட்பம் என்பதை வளர்ப்பதையும், சோதிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஓர் பாடத்திட்டமாகவும் பரீட்சை முறையாகவும் இது காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையில் உள்ள சிறந்த பாடத்திட்டங்களில் ஒன்று என்று இதனைக் கூற முடியும். மறுதலையாக இதுதான் குறிப்புகளுக்குள்ளும் (Notes) டியூட்டரிகளினுள்ளும் சமன்பாடுகளாக்கப்பட்ட எமது கல்வியினுள் பிரச்சனையும் ஆக்கியுள்ளது. இதன் காரணத்தை யாரும் இலகுவில் இப்போது பரிந்து கொள்ளமுடியும். உதாரணமாக சித்திர - கோட்பாடு பற்றிய விளக்கங்களுக்கு குறிப்பிட்ட படைப்பை அல்லது ஓவியத்தை நாங்கள் சொந்தமாகப் பார்த்து ஞாபகப்படுத்திக் கொள்ளமல் வெறும் குறிப்புகளைப் (Notes) பாடமாக்கி விடையளிக்க முடியாது. அங்கு உங்கள் தகவல் திறனல்லாமல் அழகியல் முடிவும் காட்சி ஞாபகமுமே சோதிக்கப்படுகின்றது.

▶

எனவே இந்தப் பாடத்திட்டத்தை நாங்கள் அணுகும் முறையில் தான் பிரச்சனை உள்ளது. இதை மற்றைய பாடத்திட்டங்களைப் போல தகவல் சமன்பாடுகளினுள் இலகுவாக அடக்கிக் கொள்ள முடியாது. இந்தப் பாடத்திட்டம் தனது கடைசித் தெரிவாக சித்திரப் பாடத்தையும் தனது அரச உத்தியோகத்திற்கும் ஓய்வூதியத்திற்குமான கடைசி சந்தர்ப்பமாக சித்திர ஆசிரியர் தொழிலையும் தெரிவு செய்பவர்களுடன் சமரசம் செய்ய மறுக்கின்றது என்பதே எனது அவதானமாகும். இதுவே இந்தப் பாடம் சம்பந்தமாக சொல்லப்படும் பல அடிப்படைப் பிரச்சனைகளுக்கு காரணம் எனலாம்.

அவையாவன,

1. மாணவர்களுக்கு வழிகாட்ட ஆசிரியர்களால் முடியாதிருத்தல்.
2. வேண்டப்படும் கோட்பாட்டுப் பகுதிகளுக்கான போதிய தகவல்கள் அல்லது விடயங்கள் ஆசிரியர்களிடம் இல்லாதிருத்தல் / தமிழில் இல்லாதிருத்தல்.
3. பரீட்சைத் தாள்கள் தமிழுக்கு மொழி பெயர்க்கப்படுகையில் பெருமளவு சிங்களச் சொற்கள் அப்படியே தமிழில் அச்சடிக்கப்பட்டிருத்தல் - இது சித்திரம் என்றால் சிங்களம் என்றாகி விடுகின்றது.
4. பாடசாலைகளில் மாணவர்கள் உலக கலை வரலாறு சம்பந்தமாக படங்களைப் பார்க்க புத்தகங்கள் இல்லாமல் இருத்தல்.
5. ஆசிரியர்களும் மாணவர்களும் பாடவிதானத்திலும் பரீட்சைத் தாளிலும் என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதைப் புரியாதிருத்தல்.
6. எல்லாவற்றுக்கும் மேல் இதற்கு தனியார் வகுப்புக்களிற்குப் (*Tution*) போக முடியாதிருத்தல்.

இந்த அடிப்படையில் சித்திர ஆசிரியர்களிடம் காணப்படும் வளப்பற்றாக்குறை என்பது பாரிய பிரச்சனையாக உள்ளது. அதேவேளை சித்திரம் கற்றல் கற்பித்தல் நிலைகளில் ஓர் அணுகுமுறை மாற்றமும் (Attitude change) அடிப்படையானது. இந்தியாவின் மிக முக்கியமான ஓவியரும் கலை விமர்சகரும், மிக முக்கியமான ஆசிரியருமான K. G. சுப்பிரமணியம் சொன்னதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். "ஒருவர் படைப்பாளியாக (ஓவியராக) இருத்தல் என்பதே படைப்பாக்கத்தை (ஓவியத்தை) கற்பித்தற்கான ஒரே வழியாகும்" அந்த வகையில் எமது ஆசிரியர்கள் ஓவியர்களாக இருக்கும்போது சித்திர ஆசிரியர் தொழில் என்பது ஓர் தொழிலாக அல்லாமல் தெரிவாக, வாழ்க்கையாக மாறும்போது சித்திர பாடம் பற்றிய பற்றாக்குறைகளும் கஷ்டங்களும் விலகிவிடும். உண்மையான ஆர்வமுள்ள மாணவன் கண்டுபிடிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவான். எங்காவது மாணவர்கள் ஓவியத்தை விரும்பி, துணிந்து கற்கிறார்கள் என்றால் அங்கு இந்த ஆசிரியரை நாங்கள் இன்றும் இனங்காணமுடியும். ■

***குளிர் சாதனப் பெட்டி இல்லாதவர்களில் பெரும்பாலானவர்கள் கோடை காலத்தில் மண்பானையில் தண்ணீர் வைத்திருப்பார்கள். கடும் வெயில் காலத்திலும் மண்பானையில் உள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கும்.***

***இப்படிக் குளிர்ச்சியாக இருப்பதற்கக் காரணம் என்ன தெரியுமா?***

மண் பானையில் கண்ணுக்குத் தெரியாத ஏராளமான நுண் துளைகள் உள்ளன. இந்த நுண் துளைகள், மண்பானைகளில் மணல் துகள்களுக்கிடையேயுள்ள இடை வெளிகள் ஆகும்.

இத்துளைகள் வழியாக நீர் மிகச் சிறிய அளவில் கசியும். கசிந்த நீர் வெளியே உள்ள வெப்பத்தால் சூடாக்கப்பட்டு ஆவியாக மாறும். ஆவியாவதற்கு இந்த வெப்பம் மட்டும் போதாது. ஓரளவு வெப்பத்தை மண்பானையில் உள்ள நீரில் இருந்தும் எடுத்துக் கொள்ளும். இதனால் மண்பானை நீர், வெளிவெப்பநிலையை விடக் குறைந்த வெப்பநிலையைக் கொள்கிறது. இதனால்தான் மண்பானை நீர் குளிர்ச்சியாக இருக்கிறது.

மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க ஒரு வரியிலேயே பெருக்கி முடிக்க மேலும் இரு உதாரணங்கள்.

*இடமிருந்து வலமாக செய்முறை தரப்படுகின்றது.*










✸ *அம்புக்குறி காட்டும் திசையில் இலக்கங்களைப் பெருக்கிக் கூட்டுக. ஒன்றாம் இட இலக்கத்தை எழுதி மீதியை அடுத்த படிக்குக் கொண்டு சென்று கூட்டுக.*

✸ *செய்முறையில் ஒரு சமச்சீர்த்தன்மை இருப்பதை அவதானிக்கலாம்.*

✸ *இவ்வாறு பெருக்குவது நினைவாற்றலை அதிகரிக்கும்.*

# விஞ்ஞானத் துளிகள்

1. நின்று கொண்டே தூங்கும் உயிரினம் *குதிரை*
2. தலையைத் திருப்பாமலே பின்னால் வருவதை அறியும் பிராணி *ஒட்டகச்சிவிங்கி*
3. முதன் முதல் கண்டுபிடிக்கப்பட்ட மூலகம் *செப்பு*
4. *நீலத்திமிங்கிலம்* (*Blue whale*) மிகப்பெரிய உயிரினம். இதன் நாக்கில் ஆபிரிக்கக் காட்டு யானை நிற்கும். அவ்வளவு பெரியது.
5. அணுக்கதிர் தாக்கத்திற்கு உட்பட்டாலும் உயிர் வாழக்கூடிய உயிரினம் *கரப்பான் பூச்சி*
6. தரை (மண்) இன்றி தாவரங்களை நீரில் வளர்க்கும் முறை *ஹைட்ரோ போனிக்ஸ்* (*Hydro ponics*)
7. கனியங்களின் கடினத்தன்மையை அளக்கப்பயன்படுவது *மோவின் அளவுத்திட்டம்* (*Moh's scale*)
8. மனிதனின் செவிகளில் காணப்படும் சுரப்பி *செருமினஸ் சுரப்பி*
9. ஏவுகணை தயாரிப்பில் உதவும் பிரதான பொருள் ***TNT*** (*Tri Nitro Toluene*)
10. உலகில் அதிக இலையைக் கொண்ட மரம் *சைப்பிரஸ்*
11. சூழல் வெப்பநிலைக்கேற்ப அங்கிகளின் உடல் வெப்பநிலை மாறுதல் ***Poikilo Thermy*** என அழைக்கப்படுகின்றது.
12. தண்ணீர் இல்லாமல் வாழும் உயிரினம் *எலி*
13. விஞ்ஞானிகளின் சொர்க்கம் என அழைக்கப்படும் கண்டம் *அண்டார்டிக்கா*
14. செயற்கை மழை பெய்யத் தேவையான இரசாயனப் பொருள் *சில்வர் அயோடைட்*
15. விமானங்கள் விபத்துக்குள்ளான காரணத்தைக் கண்டறியப் பயன்படும் கறுப்புப் பெட்டி (Black box) யின் நிறம் *செம்மஞ்சள்*
16. உலகில் முதன்முதலாக மருத்துவ மனைகள் தோன்றிய இடம் *ரோம் நகர்*
17. தாவரங்களுக்கு உயிரும் உணர்ச்சியும் உண்டு என்று கண்டுபிடித்தவர் *ஜெகதீஸ் சந்திரபோஸ்*
18. சூரிய ஒளி பூமியை வந்தடைய எடுக்கும் நேரம் *8 நிமிடம்*
19. சுவாசிக்காமல் வாழும் ஒரே உயிரினம் *ஜீஸ்ட்*
20. இந்தியாவின் அணுச்சக்தி ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் *ஹேரலி ஜஹாங்கீர் பாபா*
21. முட்டைக்கோஸ் உணவைச் சேமிக்கும் இடம் *இலை*
22. நீலநிறமாகக் காட்சியளிக்கும் கிரகம் *நெப்டியூன்*
23. வான் பொருட்களில் சூரியன், சந்திரனை அடுத்து மூன்றாவதாக பிரகாசமான பொருளாக அமைவது *வெள்ளி* ஆகும்.
24. ஞாயிற்றுத் தொகுதியில் அமையும் மிகப்பெரிய உபகோள் வியாழனின் *கனிமீட்* ஆகும்.
25. பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய கொள்கைகளுள் அதிகமானோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை - *பெரும் வெடிப்புக் கொள்கை* (Big Bang Theory) ஆகும்.

தொகுப்பு
துளசிராம், சந்திரகுமார்

# சிந்தனைக்கு . . .

## *தமிழரே தமிழை ஒதுக்கலாமா?*


தெரிதல் 2

தமிழரே தமிழை ஒதுக்கலாமா?

தெற்கிலுள்ள அரசுத் திணைக்களத்திலிருந்து சிங்களத்தில் கடிதம் அல்லது அறிவித்தல் ஏதும் வந்தால் எரிச்சல் அடைகிறோம்; சில வேளைகளில் பத்திரிகைகளில் அது செய்தியாகவும் வருகிறது.

இன்னொரு மொழியைத் திணிப்பதை – தமிழும் உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலையில்கூட – அத்தகைய செயல் எதிர்க்கப்பட வேண்டியது தான்.

ஆனால் மறுவளமாக, நாமே விரும்பி ('திணிப்பு ஏதுமின்றி') தெரிந்து கொள்வது எவ்வாறு இருக்கிறது? நமது தாய்மொழியான தமிழிற்கு, நடைமுறையில் என்ன இடத்தினை வழங்குகிறாம்?

குருநாகலில் கடைசியாக நடந்து முடிந்த '29 – ஆவது தேசிய விளையாட்டு விழா' வில் வழங்கப்பட்ட சிங்களச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள, வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் – அலுவலர்களும் மறுத்துவிட்டனர்; பதிலாக ஆங்கிலத்தில் தருமாறு கோரினார்கள்; இது பத்திரிகைகளில் வந்த செய்தி.

தமிழில் சான்றிதழ்களைத் தருமாறு கோரும் அக்கறை அவர்களிடம் இருக்கவில்லை!

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள அநேக திணைக்களங்கள் ஆங்கிலத்தில் இயங்கி, தமிழ் மக்களுடன் ஆங்கிலத்தில்தான் இன்றும் தொடர்பு கொள்கின்றன.

வங்கி, அஞ்சலகம் போன்ற அத்தியாவசிய சேவை நிலையங்களிலும் தமிழ் மக்கள் ஆங்கிலத்திலேயே பெருமளவிற்குத் தமது வேலைகளை முடித்துக் கொள்கின்றனர்; தமிழ்ப் பகுதிகளிற்குள் அனுப்பும் கடிதங்களிற்கூட ஆங்கிலத்திலேயே முகவரி இடுகின்றனர்.

கையெழுத்தினை ஆங்கிலத்தில் வைக்க விரும்புகின்றனர்!

தமிழர் மட்டுமே வாசிக்கும் தமிழ் பத்திரிகைகளில் மரண அறிவித்தல்கள், பாராட்டுச் செய்திகள் ஆங்கிலத்திலும் வருகின்றன!

தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் நகர்ப்புறக் கல்லூரிகளிற் சில, மாணவர் அனுமதி பற்றிய அறிவித்தலை ஆங்கிலத்தில் வெளியிடுகின்றன.

விளையாட்டுப் போட்டிகளின்போது – குறிப்பாகத் துடுப்பாட்டத்தில் (கிரிக்கெற்) அறிவுப்புக்கள் ஆங்கிலத்தில்!

யாழ் பொது நூலக கிளைகளிலுள்ள வாசகர் வருகைப் பதிவேட்டில் தினமும் 99.9 வீதத்தினர், தமது பெயர் – முகவரிகளை ஆங்கிலத்தில்தான் எழுதுகின்றனர்.

யாழ். மாநகரசபையின் பொறுப்பிலுள்ள "துரையப்பா விளைளாட்டரங்கின்" பெயர்கூட ஆங்கிலத்தில் மிகப் பெரிதாகவுள்ளது; தமிழிலும் சிங்களத்திலும் சிறிய அளவில்

ஆங்கிலத்தை கற்பது என்பது வேறு; காலனித்துவகால அடிமை மனப்பாங்கில் – "ஆங்கிலமே பெருமைக்குரியது" – நமது சுய அடையாளத்தை இழப்பது வேறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாமே எமது மொழியை 'ஒதுக்கி வைத்துக் கொண்டு' மற்றவர் செயலை நொந்து கொள்வதில் அர்த்தமேயில்லை!

தேசிய உணர்வுடனும் தாய்மொழிப் பற்றுடனும், நடைமுறையில் – எங்கும் – தமிழிற்கு முக்கியத்துவம் கொடுக்க நாம் முயலவேண்டும்!

மொழிப்பற்றை (மொழி வெறியை அல்ல) சிங்கள மக்களிடமிருந்தாவது கற்றுக் கொள்வோமா?

*நன்றி - தெரிதல் 02 மாசி - பங்குனி, 2004*

# இலங்கையின் புகழ்

## *சிங்கள சினிமாவின் ஞானாசிரியர் (God father)*
## *கலாகீர்த்தி Dr. லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ் (Dr. Lester James Peries)*



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2003 டிசெம்பர் 17 இல் நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் Dr. லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ் அவர்களும், போராசிரியர் ஜோசப் சிறியால் மலிக்பீரிஸ் அவர்களும் கௌரவ டாக்டர் பட்டங்களைப் பெற்றார்.

இங்கு நாம் இலங்கையின் புகழ் தேடித்தந்த கலைஞரான Dr. லெஸ்ரர் ஜேம்பீரிஸ் பற்றிப் பார்ப்போம்.

1919 இல் பிறந்த லெஸ்ரர் அவர்கள், ஆரம்பத்தில் ஒரு பத்திரிகையாளராகவே கடமை புரிந்தார். காண்பியக்கலைகளால் கவரப்பட்டு சினிமா உலகில் நுழைந்து ஸ்ரீலங்காவின் சினிமாவிற்கு பெருமை தேடித்தந்த முன்னோடியாகத் திகழ்கின்றார்.

இலங்கையில் சினிமா அறிமுகமான சில ஆண்டுகளில் லெஸ்ரர் அவர்கள் சினிமா உலகில் நுழைகின்றார். சினிமா வருமானம் ஈட்டித்தரும் தொழிலாக இருந்த அந்தக்காலத்திலேயே அதனை ஒரு கலை வடிவமாக மாற்றிய பெருமை லெஸ்ரர் அவர்களையே சாரும்.

1956 இல் லெஸ்ரர் நெறியாள்கை செய்த முதல் படமான ரேகாவ (விதியின் கோடுகள்) வெளிவருகின்றது. அன்றைய கால சிங்கள, தென்னிந்திய வர்த்தக சினிமாவில் இருந்து முற்றிலும் விலகி கலைத்துவமான (Artistic film) திரைப்படமாக முத்திரை பதிக்கின்றது ரேகாவ.

பல தலைமுறை சிங்கள திரைப்பட இயக்குநர்களில் தீவிரமான பாதிப்பை ஏற்படுத்துபவராக இன்றுவரை லெஸ்ரர் அவர்கள் விளங்குகின்றார். ஆசிய சினிமாவின் குறிப்பிடத்தக்க திரைப்பட இயக்குநர்களான சத்தியஜித்ரே அகிரோ குரோசோவா, ஆகியோருடன் இணைத்துப் பேசப்படுவர்.

*Dr. லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ் பெற்ற முக்கிய விருதுகள்.*

- *1997- ஸ்ரீலங்காவின் 50 வருட சிங்கள சினிமா நிறைவு விழாவில் ஜனாதிபதி தங்கச்சிங்க விருது (Presidential Award Golden Lion)*
- *2000- இந்திய அரசினால் டெல்கியில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் "வாழ்நாள் சாதனை" விருது (Life Time Achivement)*
- *2001- ஆசிய கலைத்துவமான சினிமாவிற்கு ஆற்றிய மகத்தான பங்களிப்பினைக் கௌரவித்து பிரான்சின் (Deauville) இல் நடைபெற்ற திரைப்பட விழாவில் தங்கத்தாமரை (Golden Lotus) விருது*
- *2001- ஆசிய சினிமாவிற்கு வழங்கிய சிறந்த சேவையைப் பாராட்டி ஆசிய திரைப்பட அமைப்பு வழங்கிய ஆசிய சினிமா கலாச்சார விருது (Asian Film Culture Award)*
- *2003- பிரான்சில் நடைபெற்ற கேன்ஸ் (Cannes) திரைப்பட விழாவில் UNESCO அமைப்பினால் வழங்கப்பட்ட பெலினி தங்கப்பதக்கம் (Fellini*

*Gold Medal)*

லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ் சினிமாவின் ஊடாக கலை உலகிற்கு ஆற்றிய சேவையை பல சர்வதேச கலாச்சார அமைப்புக்கள் அங்கீகரித்துள்ளன.



*2003 இல் UNESCO விருது பெற்று நாடு திரும்பியபின் இலங்கையில் நடைபெற்ற ஒரு விழாவில்*

இங்கு சினிமா, திரைப்படம் என்று குறிக்கப்படுவது நீங்கள் வீடுகளிலும், திரையரங்குகளிலும் பார்க்கும் மசாலா தமிழ்த்திரைப்படங்களை போன்றன அல்ல இவை நல்ல திரைப்படங்கள் (கலைத்துவமான திரைப்படங்கள்) வகையைச் சார்ந்தவை.

1970 களில் லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ் அவர்கள் ஒரு நேர் காணலில், "இந்த நூற்றாண்டின் மாபெரும் கலாச்சாரப் படுகொலை தமிழ்த்திரைப்படங்களே" என்று குறிப்பிடுகின்றார். இன்றுவரை 97% தமிழ்ப்படங்கள் இதைத்தான் செய்துவருகின்றன. ■

**Dr. லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ் நெறியாள்கை செய்த திரைப்படங்களில் சில**

| | | |
|---|---|---|
| ரேகாவ (விதியின் கோடுகள் ) | - | 1956 |
| சந்தேசய (செய்தி ) | - | 1960 |
| கம்பெரலிய (கிராமப் பிறழ்வு) | - | 1964 |
| கொளுகடவத்த (ஊமை இதயம்) | - | 1968 |
| தாசநிசா (கண்கள் இல்லாததால்) | - | 1972 |
| The God King (ஆங்கிலத் திரைப்படம்) | - | 1975 |
| யுகாந்தய (யுகத்தின் முடிவில் ) | - | 1983 |
| வேகந்தவலோவ (Wekande walawwa) | - | 2001 |

**நிழல்** நல்ல சினிமா பற்றி அறிந்துகொள்ள விரும்புவோரும், சினிமா என்ற கலையின் பல்வேறு பரிமாணங்களை அறிய விரும்புவோரும் படிக்கவேண்டிய சஞ்சிகை "நிழல்", இதுவரை பத்து இதழ்கள் வெளியாகியுள்ளன.




10வது இதழில் - சென்னையில் நடைபெற்ற உலகத்திரைப்பட விழா- ஈரானிய குழந்தைகள் திரைப்படங்கள், 34வது சாவதேச திரைப்பட விழா-நியூடெல்கி, ஈரானிய பள்ளி மாணவி இயக்கிய திரைப்படமான "ஐந்துமணி பிற்பகல் பொழுதில்" (Five in the Afternoon), சிங்கள சினிமா வரலாறு ஒருபார்வை என்ற இளம்பரிதியின் கட்டுரை, நீங்கள் அறிந்த பிதாமகன், இயற்கை பற்றிய சில விஷயங்கள், சினிமா ரசனை என்ற பகுதியில் 5 தடவைக்குமேல் பார்த்த திரைப்படம் பற்றி கார்த்தி எழுதும் ஞபாகங்களின் பெருமிதம்..... என்றவாறு எமது சிந்தனைகளையும் பார்வையையும் அகலப்படுத்த தூண்டும் அம்சங்கள் குவிந்துள்ளன.

யாழ் பொதுநூலகத்திலும் இணுவில் பிரதேசநூலகத்திலும் இச்சஞ்சிகையைக் காணலாம். இது இந்தியாவில் இருந்து வெளிவரும் சஞ்சிகையாகும்.

# யாழ்ப்பாணத்தில் நல்ல திரைப்படங்களை எங்கே பார்க்கலாம்?

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் பிரதி ஞாயிறுதோறும் மு.ப 10.00 மணிக்கு உலகின் பல மொழிப் பாடங்கள் தமிழ் உட்பட காட்டப்படுகின்றது. ஆர்வமுள்ள எவரும் இத்திரைப்படக் காட்சியைப் பார்த்து பயன் பெறலாம். சிங்கள, மலையாள, கன்னட,வங்களா, பிரெஞ்சு,..... மொழிப் படங்கள் ஆங்கில உப தலைப்புக்களுடன் காட்டப்படுகிறது. சினிமாவை புரிந்துகொள்ள மொழி அத்தியவசியமானது அல்ல. மாணவர்கள் ஆங்கில மொழிப் படம் எமக்கு விளங்காது என்று நினைக்கத்தேவையில்லை. ஆங்கில உபதலைப்புக்களுடன் கூடிய 2,3 திரைப்படங்களைப் பார்த்த பின் உபதலைப்புக்களுடன் கூடிய திரைப்படங்களைப் பார்க்க சிரமம் இருக்காது.

மிஸ்டர் அன்ட்
மிஸிஸ் அய்யர்



சினிமா என்பது பிரதானமாக காட்சி ரூபப்படுத்தலே. அங்கு பேச்சு குறைவாக இருக்கும், காட்சிகளினூடாக கதை நகர்த்தப்படுதல் நல்ல சினிமாவின் பிரதான அம்சமாகும். அந்தக்கால சிவாஜிகணேசன் படம் முதல் இந்தக் கால அஜித் படங்கள் வரை பேச்சு,பேச்சு... என்று ஒரே பேச்சாகவே இருப்பதைக் காணலாம். விதிவிலக்காக சினிமாமொழியைக் கையாண்ட தமிழ்ப் படங்கள் உண்டு.

சிறுவயதில் 7ம்,8ம் வகுப்புக்களில் படிக்கின்ற காலத்தில் எனக்கு திரைப்படங்கள் மீது ஆர்வம் இருந்துவந்தது. பொதுவாகவே சிறுவர்கள் திரைப்படங்களைப் பார்க்க விரும்புவார்கள், பின்னர் தரம் 10,11, உயர்தரம் படிக்கின்றபோது எனக்கு தமிழ் சினிமாமீது வெறுப்பே இருந்துவந்தது .காரணம் நம்பமுடியாத காதல் கதைகளும், வன்முறைக் காட்சிகளும் ஒருவித வாய்பாட்டு பாணியில் இருந்தமை எனது சினிமாவின் மீதான ஈடுபாட்டை முற்றாக நீக்கியது. 96,97 களில் பல்கலைக்கழகத்தில் நிகழும் திரைப்படக்காட்சிகளை பார்த்த பின்பே உண்மையில் திரைப்படம் என்றால் என்ன? அதுவும் கலைத்துவமான திரைப்படம் பற்றி அறிந்து கொண்டேன். சினிமாவின் அழகினைப் புரிந்து கொண்டதும், சினிமா வலுவான கலை ஊடகம் எவ்வாறெனில் ஒரு நாவல், சிறுகதை, கவிதை, சங்கீதம் நடனம், ஓவியம் ஆகிய கலைகளின் மொத்தக் கூட்ட வடிவம் என்பதையும் உணரமுடிந்தது.




அண்மைய ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தில் பார்த்த The old man and the sea, The postman, The Grant Illusion, The Pianist, After the war, தீர்த்த யாத்திரா, The Black boards, அருந்ததி இலக்கிய முகம், நதிக்கரையிலே (தமிழ்) Mr and Mrs Iyar, The party, ...... போன்ற திரைப்படங்களைப் பார்க்க கிடைத்தமை பெரும் பேறெனவே கருதுகின்றேன். ■

*பிரணவன்*

1989இல் வெளியான "சினிமா பாரடிசோ" வில் சில காட்சிகள் - சிறந்த வெளிநாட்டுப் படத்திற்கான ஒஸ்கார் விருதும், கான்ஸ் திரைப்பட விழாவின் நடுவர் பரிசும் பெற்றது.





## நல்ல திரைப்படங்கள் பற்றி "ஆத்மா" சஞ்சிகையில் திரைப்பட விமர்சகர் அ. யேசுராசா அளித்த நேர்காணலிலிருந்து ஒரு பகுதி

***1. 'நல்ல திரைப்படம்' என்ற வகையினுள் அடங்கக்கூடிய தமிழ்ப் படங்கள் சிலவற்றைக் கூறமுடியுமா?***

பூரணமான அர்த்தத்தில் நல்ல கலைத் திரைப்படம் எனக் கூறமுடியாவிட்டாலும், பல சிறப்பம்சங்களைக் கொண்ட படங்கள் உருவாக்கப்பட்டே உள்ளன. இவற்றை 'நடுத்தரப் படங்கள்' (Middle Cinema) என்ற வகையினுள் அடக்கலாம். அந்தநாள், ஏழைபடும்பாடு, தாகம், திக்கற்ற பார்வதி, உன்னைப் போல் ஒருவன், அக்கிரஹாரத்தில் கழுதை, குடிசை, உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள், பசி, அழியாத கோலங்கள், அவள் அப்படித்தான், தண்ணீர் தண்ணீர், மறுபக்கம், கறுத்தம்மா, பாரதி, குட்டி, நிலாக்காலம், நாயகன், தேவதை முகம், பன்னீர் புஷ்பங்கள், ரெறறிஸ்ற், அழகி என்பவற்றோடு வேறு சிலவற்றையும் சொல்லலாம். ஈழத் திரைப்படங்களில் பொன்மணி, காற்று வெளி, முகங்கள். நிதர்சனம் தயாரிப்பில் வெளிவந்த பல குறும்படங்கள் என்பவை முக்கியமானவை.



***2. வகைதொகையற்ற தமிழ்த் திரைப்பட வெளியீடுகளுக்கிடையே 'சிறந்த படம்' ஒன்றைத் தெரியமுனையும் ஒருவரின் அணுகுமுறை எப்படி இருக்கவேண்டும்?***

யதார்த்தமான கதை, அதாவது தான் காணும் - கேள்விப்படும் - மனிதர்களின் பிரச்சனைகளை, உண்மையான வாழ்க்கையைச் சித்தரிப்பதாக உள்ளதா எனப் பார்க்க வேண்டும். தனது பொதுப்புத்தியை அவமதிக்கும் - தன்னை மடையனாக்கும் - அம்சங்களைக் கொண்டுள்ளவற்றைப் புறக்கணிக்க வேண்டும். ஆபாசமான காட்சிச் சித்தரிப்புக்களின் மூலம் தன்னைக் கவரமுயலும் படங்கள், தன்னைக் குறைவாக மதிப்பிட்டு இழிவுபடுத்துபவை என்று உணர்தல் வேண்டும்; ஆகவே அவற்றை ஒதுக்க வேண்டும். குறைந்தளவு குறைபாடுகளுடன், வித்தியாசமான கதையுடன், காட்சிரூப வெளிப்பாடாக வருவனவற்றையும் தெரியலாம். உதாரணமாக பவித்ரா, காதல் கோட்டை, மூடுபனி, சிட்டுக்குருவி, ஜானி, என்னுயிர்த் தோழன் போன்ற படங்களைச் சொல்லலாம். நல்ல படங்களைப் பற்றிய தகவல்களைப் படிக்கும்போது குறித்து வைத்துக் கொள்வதும் தெரிவதற்கு உதவியாய் அமையும். ■

## பயனுள்ள இணையத்தளம்......

இணையத்தளத்தில் மாணவ, மாணவியர்களுக்கு உதவும் ஏராளமான தகவல் தளங்கள் உள்ளன. பல்வேறு பிரிவுகளில் படிப்போருக்கு உதவும் பயனுள்ள தகவல் தளங்களில் சிலவற்றின் தொகுப்பு உங்கள் பயன்பாட்டுக்காக.

### ஓவியக் கலை மாணவர்களுக்கு



ஓவியக் கலை பயிலும் மாணவர்கள் மற்றும் இதில் ஆர்வர்களுக்கு பெயிண்டிங் செய்வதிலுள்ள பல நுட்பங்களை விளக்குகிறார் ரஷ்ய ஆர்டிஸ்ட்டான் அண்டோனோய். கிளாசிக்கல் ஓயில் பெயிண்டிங் வரையைக் கற்றுக் கொள்பவர்களுக்கும் இத்தளம் வழிகாட்டுகின்றது. வண்ண வண்ண இமேஜ்கள் இத்தளத்தில் உள்ளன. விரும்பினால் ட்வுன்லோட் செய்து கொள்ளலாம்.

*தளமுகவரி*

***www. lart. com***

படம் வரைவது தொடர்பான பயனுள்ள வழிகாட்டுதலையும், ஏராளமான குறிப்புக்களையும் தரும் மற்றொரு தளம் ஆர்ட் மியூசியம்ஸ், ஓவியக் கல்லூரியில் படிப்போர் ஓவியம் வரைவதில் ஆர்வம் உள்ளோர் அனைவரும் அவசியம் உபயோகித்துப் பெற வேண்டிய தளம்.

*தளமுகவரி* ***www artmuseums. com***

### இரசாயனவியல் வாத்தியார்

வேதியியல் படிப்போருக்கு உதவும் அருமையான தகவல்களைத் தருகிறது. அட்ரியன் டிங்கிள்ஸ் கெமிஸ்ட்ரி பேஜஸ் எனும் தளம். குறிப்பாக உயர் நிலை மற்றும் மேல்நிலை பள்ளியில் கெமிஸ்ட்ரியை ஒரு பாடமாக படிப்போருக்கு உதவும். நோட்ஸ் வேக்ஷீட்ஸ், ஆய்வக உதவிக் குறிப்புக்கள் என ஏராளமான தகவல்கள் உண்டு. அனைத்தையும் டவுன்லோட் செய்து கொள்ளலாம்.

*தளமுகவரி*

***www westminster. net/ faculty/ dindle***

### ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ஸ் ஆர்வலர்களுக்கு

கம்யூட்டர் அறிவியலில் அடுத்த கட்ட வளர்ச்சி ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ஸ். மனிதர்கள் எப்படி சுயமாகச் சிந்திக்கிறார்களோ அதே போல கம்யூட்டர்களும் சுயமாகச் சிந்தித்து, செயலாற்றுவதையே ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ஸ் என்கிறோம். இது தொடர்பாக படிப்போர் மற்றும் ஆராய்ச்சி செய்வோர் அனைவருக்கும் பயன்தரும் வண்ணம் இன்டர்நெட்டில் ஏராளமான தகவல் தளங்கள் உள்ளன. இவற்றை சலித்து அவற்றுள் பயனுள்ள தளங்களை எல்லாம் தொகுத்துத் தரும் அரும்பணியைச் செய்கிறது இன்ஸ்டியூட் ஓ.ஃப் இன்.ஃபர்மேஸன் டெக்னாலஜி நிறுவனத்தின் தளம். ▶

*தளமுகவரி* ***Http:// ai. iii, nrc. ca/misc. html1***

## அணுவியல் ஆசிரியர்

நியூக்கிளியர் சய்ன்ஸ் எனப்படும் அணு அறிவியல் படிப்போருக்கு உதவும் அருமையான தளமாகும். பொதுவாக அணு பற்றி அறிந்து கொள்வோரும் இத் தளத்தை உபயோகிக்கலாம். அணு ஆராச்சிகள் பற்றிய அடிப்படை விபரங்களையும் ஓரிடத்தில் தருகிறது இத்தளம். அணுவியல் மாணவர்களுக்கு உதவும் பல்வேறு இன்டராக்டிக் பாடங்கள் மற்றும் அனிமேஷன்கள் இத்தளத்தில் உள்ளன.

*தளமுகவரி-*
***Http:// librayy. advanced. org/ 17940***

## இயற்பியல் (பௌதீகவியல்) மாணவர்களுக்கு

இயற்பியல் மற்றும் மெட்டீரியல் சயின்ஸ் படிப்போருக்கு உதவும் ஏராளமான நோட்ஸ்களைத் தருகிறது. இத்தளம், துவக்கப்பள்ளியில் அறிவியல் போதிக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் பொதுவாக அறிவியல் பற்றி அறிந்து கொள்ள விரும்புவோரும் கூட இத்தளத்தைப் பயன்படுத்தலாம்.

*தளமுகவரி-*
***www. newi. ac. uk/ buckley/bed. htm***

## கட்டுரை எழுத கனிவான வழிகாட்டி

கட்டுரைகள் எழுதுவதென்பது மாணவ, மாணவியருக்கு அவசியமாகிறது. அதிலும் குறிப்பாக உயர்நிலை, மேல்நிலை மற்றும் கல்லூரிகளில் படிப்போருக்கு கட்டுரை எழுதும் கலையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியது அவசியம். காரணம் அப்போது தான் அதிக மதிப்பெண்களைப்பெற இயலும். கூடவே போட்டித் தேர்வுகளிலும் கட்டுரை எழுதவேண்டியது அவசியமாகிறது. ஆக நல்ல வேலைக்குப் போக வேண்டும் என்றால் நன்கு கட்டுரைகள் எழுதத் தெரிந்திருக்க வேணடும். அதற்கு உதவுவது இத்தளம். கட்டுரை எழுதுவது எப்படி என்பது பற்றிய அடிப்படைத் தகவல்களைத் தருவதோடு, கட்டுரை எழுத வழிகாட்டும், பல்வேறு இணையத்தளங்களின் தொகுப்பையும் தருகிறது இத்தளம்.



*தளமுகவரி-Http://*
***members. aol. com./ lklivngstn/ essay/L***

✸ 300 பாடல்களை ஒரே *CD* (குறுவட்டு) யில் பதிவு செய்யும் *MP3 CD* ஐ உருவாக்கியவர் சேர். பிரான் கோவ்பர் (*SIR. FRAUN HOFFER*)

**Federalism (கூட்டாட்சிக் கொள்கை)**

சட்டரீதியான அரசியல் அதிகாரத்தை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து கொள்வதற்கு ஏதுவான அரசியல் அமைப்பு. இந்தக் கூட்டாட்சி அரசில் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே நிகழும் சிக்கல்களைத் தீர்ப்பதோடு அதிகாரத்தை நியாயமாகப் பகிர்ந்து கொள்ளவும் வழி வகுக்கிறது.

# உயிரியல் முற்றம்

ப. சேயோன்

1. உலகின் மிக அரிய தரைக்குரிய முலையூட்டியாக ஜாவா காண்டாமிருகம் (*Rhinoceros sondaicus*) காணப்படுகின்றது. இது ஒற்றைக் கொம்புடையது, தனியாக வாழும். ஒரு காலத்தில் இவை தென்கிழக்கு ஆசியாவில் நன்கு பரந்து காணப்பட்டிருப்பினும் தற்போது இவற்றின் எண்ணிக்கை வெறும் 60 மட்டுமே. இவற்றில் 50 ஜாவாவின் மேற்குப் பகுதியிலும் ஏனையவை வியட்நாமிலும் காணப்படுகின்றன.

2. உலகின் மிகப் பழமையான பூக்கும் தாவரம் *Archaefructus sinensis* எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் உயிர்ச்சுவட்டு மீதிகள் வடகிழக்கு சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக 03. 05. 2002ல் விஞ்ஞானிகள் அறிந்துள்ளனர். இதுவே தற்போதுள்ள அனைத்து பூக்கும் தாவரங்களினதும் மூதாதை எனக் கருதப்படுகின்றது. இதனுடன் மிக நெருங்கிய உறவுடையது அல்லி (Water lily) ஆகும்.

3.



ஆபிரிக்கத் தேனியின் (*Apis mellifera scutellata*) விஷம் நச்சுத் தன்மை மிகக் கூடியது. இத்தேனி சினமூட்டப்படுகையில் கொடுக்கினால் தாக்க ஆரம்பிக்கும். ஏனைய தேனிக்களை விட இது மிகவும் ஆபத்தானது. ஏனெனில் இதனால் தாக்கப்படின் மரணம் சம்பவிக்கலாம்.

4. தென்கிழக்காசியாவில் உள்ள அற்லஸ் அந்து (*Attacus atlas*) எனப்படுவதே உலகில் உள்ள மிகப்பெரிய அந்துப் பூச்சியாகும். இதன் சிறகுப் பரப்பு (Wing span) 30cm வரை காணப்படும். இதனால் இதை ஒரு பறவை இனமாக



தவறுதலாக அடையாளம் காணப்படுவதண்டு. இதற்கு வாய் இல்லை எனவே இதன் வாழ்நாள் ஏறத்தாழ 4 நாட்கள் மட்டுமே.

5. உலகில் மிக நீளம் குறைந்த *Leptotyphlops bilineata* என்ற பாம்பு மிக அரிதான இனமாகும். இது Martinique, Barbados, st. Lucia ஆகிய இடங்களில் மட்டும் அறியப்பட்டுள்ளது. இவ்வகைப்

பாம்பின் பதியப்பட்ட மிகக்கூடிய நீளம் 10.8Cm மட்டுமே. ஒரு பென்சிலின் காரீயப் பகுதியை அகற்றிய பின் உருவாகும் துளையினுள் இதன் உடல் உட்புகக் கூடியது. அந்த அளவிற்கு இதன் உடல் மெல்லியதாக இருக்கும். *Ramphotyphlos braminus* எனும் பாம்பும் 10.8cm ஐ விட நீளம் குறைந்தது.

6. தரைப்பாலூட்டி வகைகளில் மிகவேகமாக ஓடக்கூடியது சிறுத்தைப் புலி (*Acinonyoz jubatus*) ஆகும். சமதளத்தில் குறுகிய தூரத்திற்கு இதன் உறுதியான கூடிய வேகம் ஏறக்குறைய 100kmh$^{-1}$ ஆகக் காணப்படும்.

7.



ஜப்பானின் தென்கிழக்கு கடற்கரையில் காணப்படும் சிலந்தி, நண்டு (*Macrocheira kaempferi*) என்பதே சமுத்திரங்களில் உயிர்வாழும் மிகப் பெரிய கிறஸ்தேசியா ஆகும். இதன் சராசரி உடலளவு 25.4 x 30Cm ஆக உள்ளதுடன் காற்பரப்பு (leg span) 2.43mல் இருந்து 2.47m வரை காணப்படும்.

8. *Mellisuga helenae* என்ற ஆண் பறவையின் நீளம் 57cm மட்டுமே. அலகு வால் என்பன இதில் அரைப்பங்கை எடுக்கும். பெண்பறவைகள் சற்றுப் பெரியவை. இதன் நிறை 1.6g ஆகும். இளஞ்சூட்டுக் குருதி உள்ள விலங்குகளில் இதுவே மிகக் குறைந்த நிறையுடைய விலங்காக கருதப்படுகின்றது.

9. *Amanita phalloides* என்பது பங்கசுக்களில் மிக அதிக நச்சுத்தன்மை உடையது. இது உலகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றது. பங்கசுக்களினால் ஏற்படும் நஞ்சாதலில் 90% மான மரணத்திற்கு இது காரணமாக அமையும். இதன் நஞ்சு ஈரல், சிறுநீரகம் என்பவற்றைப் பாதிக்கும். உட்கொள்ளப்பட்டு 6 - 15 மணித்தியாலங்களில் சத்தி, சன்னி, மயக்கம் போன்ற அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும். இறுதியில் மரணம் சம்பவிக்கலாம்.

10. உயிர்வாழ் பறவையினங்களில் மிகக்கூடிய சிறகுப்பரப்பு (Wing span) கொண்டது *Diomededa exulans* என்ற ஆண் *albatross* ஆகும். இதன் சிறகுப் பரப்பு 3.63m ஆகும்.

***உதவி Guinness world records 2004***



*ஆடு மாடு வரிசையில் "குளோனிங்" முறையில் மான்குட்டியும் உருவாக்கப்பட்டுள்ளது. வெள்ளைவால் மான் என்பது மிகவும் அபூர்வமானது. அழிந்து வரும் இந்த இனத்தைக்காப்பாற்ற "குளோனிங்" முறையில் உருவாக்கியுள்ளனர்.*

## கணிதச் சிக்கல் 02 பரிசு ரூ. 250/=

கீழே தரப்பட்டுள்ள 3 தொடர்களினதும் அடுத்துவரும் இரு உறுப்புக்களை எழுதுக.

(1) 1, 6, 15, 28, 45, 66, , .

(2) 3, 10, 21, 36, 55, 78, , .

(3) 3, 6, 15, 28, 66, 91, , .

✷ என்னும் தொடர்களின் அடுத்து வரும் இரு எண்களும் எவை?

விடையைப் பெற்ற வழிமுறை குறிப்பிடல் வேண்டும்.

கூப்பனுடன் இணைத்து விடைகள் அனுப்பப்படல் வேண்டும். போட்டியில் கலந்து கொள்ள வயதெல்லை கிடையாது.

சரியான விடையை அனுப்பும் ஒருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவார்.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

**விடைகள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் சித்திரை 30, 2004**

**மேலும் சரியான விடை அனுப்பும் 10 பேருக்கு அறிவிசை இதழ் 03 பரிசாக அனுப்பிவைக்கப்படும்.**

## கணிதச் சிக்கல் 01 போட்டி முடிவு

## விடை

முதன்மை எண்கள் 2, 3, 5, 7, 11, 13, 17, 19, 23, 29, 31, ........

$2^2+1=5$

$3^2+2=11$

$5^2+3=28$

$7^2+4=53$

$11^2+5=126$

$13^2+6=175$

$17^2+7=296$

$19^2+8=369$

$23^2+9=538$

$29^2+10=851$

$31^2+11=972$

ரூ. 100 பெறுமதியான பரிசு பெறுபவர்

*இராஜேஸ்வரன் நிருசன்,*

*தரம் 11,*

*யாழ். இந்துக் கல்லூரி.*

சரியான விடையை அனுப்பி அறிவிசை இதழ் - 02 ஐ இலவசமாகப் பெறுவோர்

1. சிவலிங்கம் கயேந்தினி, யாழ். இந்து மகளிர் கல்லூரி.
2. சிறீஸ்கந்தராஜா சேயந்தன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
3. வி. பிரணவன், யாழ். இந்துக்கல்லூரி.
4. சபாரத்தினம் ராதிகா, யா/ யூனியன் கல்லூரி.

விடை அனுப்பியோர் எண்ணிக்கை 11 சரியான விடை அனுப்பியோர் எண்ணிக்கை 05

## பொது அறிவுப் போட்டி இல. 02 பரிசு ரூ. 500/=

1. கடந்த ஆண்டு இறுதியில் புவிநடுக்கம் ஏற்பட்டு ஏறத்தாழ 40,000 இற்கும் அதிகமான மக்கள் இறந்தது எந்த நாட்டில், எந்நகரில் ?

2. 2003 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் யார் ?

3. "The lord of the rings" என்ற புத்தகத்தை எழுதியவர் யார் ?
(உதவி Funday Times 2003, October)

4. கணினியில் பூட்டிங் (Booting) எனும் வார்த்தை எதைக் குறிக்கின்றது ?

5. 2003 இல் தென்னாபிரிக்காவில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி சேகரிக்க "46664" என்ற பெயரில் ஒரு பெரும் இசை நிகழ்ச்சி நடந்தது. இதில் 46664 எதைக் குறிக்கின்றது ?

6. இலங்கையில் பரப்பளவில் பெரிய மாவட்டம் எது ?
7. 2003 இல் கொழும்பில் நடைபெற்ற 'சரசவிய' திரைப்படவிழாவில் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றவர் யார் ?

8. பெரிய வெடிப்புக் கொள்கை ("Big Bang Theory") எதைப்பற்றியது ?

9. டெனிஸ் விளையாட்டின் "மக்கா" என அழைக்கப்படும் இடம் எது?
10. பாகிஸ்தானின் அணுகுண்டின் தந்தை என அழைக்கப்படுபவர் யார் ?

கடந்த முறை அனைத்து வினாக்களிற்கும் எவரும் சரியான விடை அளிக்கவில்லை. இம்முறை மாணவர்களை ஊக்குவிக்க அனைத்து வினாக்களிற்கும் சரியான விடை தரும் மாணவருக்கு ரூ.500/= பெறுமதியான பரிசு வழங்கப்படும்.
எவரும் அனைத்து வினாக்களிற்கும் சரியான விடையளிக்காத பட்சத்தில் ஆகக்கூடிய வினாக்களிற்கு விடையளிக்கும் மூவருக்கு ரூ.250/=, ரூ150/=, ரூ100/= பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

விடைகளுடன், இங்கு உள்ள கூப்பனை நிரப்பி அனுப்புதல் வேண்டும். உங்களது விடைகள் கிடைக்க வேண்டிய இறுதிநாள் - சித்திரை 30, 2004.
பாடசாலை செல்லாதோரும் பங்குபற்றலாம்.

பொது அறிவுப் போட்டி, கணிதச்சிக்கல் ஆகிய இரு போட்டிகளுக்குமான விடைகள் அனுப்பவேண்டிய முகவரி -

ஆசிரியர், அறிவிசை,
141, கேணியடி, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## பொதுஅறிவுப் போட்டி
## இல.01 - விடைகள்

பரிசு பெறுபவர்
**சிந்திகா செல்வரட்ணம், தரம் 12**
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

1. www இனூடாக கல்வி கற்கும் முறையை ***On line education*** என அழைப்பர். On line library, On line encyclopaedia என்று நூல்நிலையங்கள், கலைக்களஞ்சியங்கள் கூட இணையத்தில் உண்டு.
2. ஆரம்பத்தில் கருந்துளை விண்மீன்கள் ***உறையும் நட்சத்திரங்கள் (Forzen stars)*** என்றே அழைக்கப்பட்டன. Black holes என்னும் பதம் 1967 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
3. நீரில் உள்ள ஒலியலைகளைக் கண்டறியப் பயன்படும் கருவி ***Hydro phone***
4. 1914 இல் அவுஸ்திரிய இளவரசன் பிரான்ஸ் பேர்டினட் சேர்பியாவில் வேட்டையாடச் சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து 1ம் உலகப்போர் வெடித்தது. இது முதலாம் உலகப்போருக்கான உடனடிக் காரணம். ***வர்த்தகப்போட்டியே*** 1ம் உலகப்போருக்கான காரணமாகும்.
5. *வெப்பமண்டல பசுபிக் பகுதியில் கடல் வளி மண்டலப் பகுதியில் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் திடீர் நிகழ்விற்கு எல்நினோ என்று பெயர். கடுமையான புயல்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தும் பருவமாற்றத்தைக் குறிக்கும் EL - NINO என்ற பெயர் பெருநாட்டு மீனவர்களால் வைக்கப்பட்டது.*
6. *சமதரையான, மேடுபள்ளமற்ற பெருநிலப்பகுதி காணப்படுவதால்* - சுவிற்சர்லாந்து ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என அழைக்கப்படுகின்றது.
7. த பியானிஸ்ட் ***(The pianist)*** - 2ம் உலகப்போர் காலத்தில் உயிர் தப்பிய ஒரு யூதஇன இசைக்கலைஞனின் துயரமான வாழ்வைச் சித்தரிக்கும் திரைப்படம். இப்படத்திற்கு 2003இல் மூன்று ஒஸ்கார் விருதுகள் கிடைத்தன.
8. *எட்சன் அரன்டெஸ்டோ நாஸி மென்டோ* - என்பது பீலேயின் இயற்பெயர்.
9. *ஐரோப்பாவில் ஆங்கில மொழியில்* வெளியிடப்படும் புத்தகங்களில் சிறந்த ஒன்றிற்கு வருடாந்தம் "புக்கர்" (Booker) விருது வழங்கப்படுகின்றது.
10. 2003 கார்த்திகையில், தமிழீழத்தின் தேசிய மலராக ***கார்த்திகைப் பூ (Gloriosa superba)*** அறிவிக்கப்பட்டது.

**சஞ்சிகை தொடர்பான கருத்துக்களும் விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**அறிவியல் கட்டுரைகள் துறைசார்ந்த நிபுணர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது. மருத்துவம், விஞ்ஞானம், வானியல், கணிதவியல், இயற்கை விஞ்ஞானம், வரலாறு,...... சார்ந்த கட்டுரைகளை கையெழுத்தில் அச்சுத்தாளின் (A4 அளவில்) ஒரு பக்கத்தில், இரு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி அனுப்புதல் வேண்டும். ஒரு புத்தகத்தில் இருந்து பயன்மிக்க கட்டுரையை பிரதி செய்து அனுப்பின் புத்தகத்தின் பெயர், ஆசிரியர் போன்ற விபரங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வியப்பூட்டும் விஞ்ஞானத்தகவல்களை துணுக்குகளாகவும் அனுப்பலாம். மாணவர்களின் சிறந்த கட்டுரைகளுக்கு பரிசு வழங்கப்படும்.**

# சதுரங்கம் ஓர் அறிமுகம்

த. அருணகிரிநாதன்
ஆங்கிலப் போதனாசிரியரும்
சதுரங்கப் பயிற்றுவிப்பாளரும்
யாழ் பல்கலைக்கழகம்

**பகுதி 02**

முந்தைய இதழில் சதுரங்கத்தின் வரலாறு, மற்றும் அதன் இன்றைய நிலை தொடர்பாகச் சுருக்கமாகக் கூறப்பட்டது. இவ்வத்தியாயத்தில் சதுரங்க விளையாட்டு அறிமுகமாகியது. சதுரங்கப் பலகையானது 32 வெளிர்வர்ணச் சதுரங்களும் 32 கருமை வர்ண சதுரங்களுமாக மொத்தம் 64 சதுரங்களைக் கொண்டது.




இவை 8 நிரைகள், மற்றும் 8 நிரல்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஒரே நிறச்சதுரங்களின் மூலைகளின் ஊடாகச் செல்லும் நேர்வரை மூலைக்கோடு (Diagonal) எனப்படும். குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கு வசதியாக சர்வதேச சதுரங்க சம்மேளனம் (FIDE) குறியீட்டு முறைப்படி நிரல்கள் a, b, c, d, e, f, g, h என ஆங்கில சிற்றெழுத்துக்களிலும், நிரைகள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 எனவும் சதுரங்கள் இவற்றின் சேர்க்கையாகவும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

## *சதுரங்கக் காய்கள்*

சதுரங்கப் பலகையில் 16 வெளிர்வர்ண காய்களும், 16 கருவர்ண காய்களுமாக 32 காய்கள் காணப்படுகின்றன. இவற்றின் வடிவங்கள், ஆங்கிலக் குறியீடு, பிறமொழிக் குறியீடுகள், உலக சதுரங்க குறியீட்டுப்படம் என்பன கீழ்த்தரப்பட்டுள்ளன. இது பிறமொழி

| *Fig.* | *Eng.* | *Czech* | *Dut.* | *Fr.* | *Ger.*[1] | *It.*[2] | *Pol.* | *Roum.* | *Russ.* | *FIDE* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ♔ | K | K | K | R | K | R | K | R | Kp | K |
| ♕ | Q | D | D | D | D | D | H | D | ф | |
| ♖ | R | V | T | T | T | T | W | T | Л | |
| ♗ | B | S | L | F | L | A | G | N | C | |
| ♘ | N | J | P | C | S | C | S | C | K | N |
| ♙ | P | (P) | (P) | (P) | (B) | (P) | (P) | (—) | (Д) | — ▶ |

(ஆங்கிலம் தவிர்ந்த) வெளியீடுகளையும் கற்க உதவியாக அமையும்.

1. இவை ஸ்கன்டிநேவிய மற்றும் யூகோஸ்ராவிய குறியீட்டு முறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.
2. இத்தகைய குறியீடுகளே போர்த்துக்கீஸிய, ஸ்பானிய குறியீட்டு முறைகளில் பயன்படுகின்றன.

## சதுரங்கப் பலகை, மற்றும் காய்களின் அளவுகளும், வர்ணங்களும்

(1975ம் ஆண்டு உலக சதுரங்க சம்மேளன மத்திய குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு இன்றளவும் பின்பற்றப்படும் விதிகள்)





2003 பிரான்சில் நடைபெற்ற 7வது கோர்சிக்கா விரைவு சதுரங்கப்போட்டியில் வெற்றிபெற்ற வி. ஆனந் **(Corsica rapid chess tournament)**

### *சதுரங்கப் பலகை*

மரம், பிளாஸ்ரிக், தடித்த அட்டை அல்லது துணி முதலியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சதுரங்கப் பலகைகளே பொதுவாகப் பயன்படுத்தப்படும். பொருத்தமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமிடத்து கல் அல்லது சலவைக் கல்லினாலான பலகைகளும் பயன்படுத்தலாம். ஆனால் இவ்விடயத்தில் போட்டி நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்குப் பயன்படுத்தப்படும் பலகைகளின் மேற்பரப்பு பளபளப்பாக இருக்கக் கூடாது. வெளிர் மற்றும் கடும் வர்ணச் சேர்க்கையுடைய இயற்கைப் பொருட்களினாலான பலகைகளை வர்ணப்பூச்சின்றியும் பயன்படுத்தலாம். (உ-ம்:- கருங்காலி - கறுப்பு, முதிரை - வெள்ளை, சதுரங்களிற்காக) வர்ணப்பூச்சுக்கள் பயன்படுத்தப்பட்ட பலகைகள் எனின், மண்ணிறம், பச்சை போன்றவற்றை கறுப்பிற்குப் பதிலாகவும், வெண்மஞ்சள், தந்தவர்ணம் போன்றவற்றை வெள்ளைக்காகவும் பயன்படுத்தியிருக்க முடியும். பலகையின் ஒவ்வொரு சதுரமும், 5 - 6.5cm அளவினதாக இருக்க வேண்டும். சதுரங்கப் பலகையானது போட்டியாளர்களுக்கு பொருத்தமான மேசை மீதே வைக்கப்பட வேண்டும். பலகை தொடர்பாகவோ, அல்லது மேசை தொடர்பாகவோ போட்டியாளர்கள் முரண்படின் நடுவர் இவை தொடர்பாக முடிவெடுக்கலாம்.

### *சதுரங்கக் காய்கள்*

பொதுவாக மரம், பிளாஸ்டிக் சலவைக்கல், தந்தம் போன்றவற்றாலான காய்களைப் பயன்படுத்தலாம். ஆனால் காய்கள் பளபளப்பாக இருக்கக் கூடாது. அத்துடன் பலகைக்குப் பொருத்தமானதாக நெருக்கமின்றி நமுக்கு செய்யப்படக் கூடியதாக இருக்க வேண்டும். பொதுவாக அரசனின் (king) அளவு 8.5cm தொடக்கம் 10.5cm வரை இருக்கலாம். ஏனைய காய்கள் அதனுடன் பொருத்தப்பாடடையா விதத்தில் அடைய வேண்டும். ▶

காய்களின் அடிப்பீடத்தின் விட்டம் அதன் உயரத்தின் 40 -50% ற்குள் அடைய வேண்டும். காய்கள் ஒன்றிலிருந்தொன்று வேறுபடுத்தியறியக் கூடிய விதத்தில் அமைய வேண்டும். காய்கள் அதிக பாரமோ, அல்லது பாரமற்றோ இராமல் கையாள இலகுவாக இருக்க வேண்டும். மேலும் காய்கள் கவனத்தை திசைதிருப்பக் கூடிய அலங்கார வேலைப்பாடுகள் அற்றவையாக இருக்கவேண்டும். காய்கள் தொடர்பாக விளையாட்டு வீரர்கள் முரண்படின் இது தொடர்பாக நடுவர் தீர்மானம் எடுக்கலாம்.

குறிப்பு :-

இன்று யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே இவ்விதமுறைகள் கடைப்பிடிக்கப் படாதிருப்பதுடன் வீரர்கள், மற்றும் பெரும்பாலான நடுவர்கள் இவை தொடர்பாக தெளிவற்றவர்களாகவுள்ளனர். மேலும் இத்தகைய தரமான சதுரங்கப் பலகைகள், காய்கள் போன்றன இங்கு கிடைக்காமையும் இதற்கான காரணங்களாகும். தவிர்க்கமுடியாத சூழ்நிலையிலேயே இவை பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனவென்பதனை அனைத்து சதுரங்க வீரர்களும் மனத்திற் கொள்வது அவசியமாகும். தரமற்ற பலகைகள், காய்கள் கூட வீரர்களின் மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களின் செயற்திறனைக் குறைத்து பெறுபேற்றையும் பாதிக்கும்.

அடுத்த இதழில் குறியீடுகளைப் பயன்படுத்தி எங்ஙனம் ஆட்டத்தினை பதிவு செய்ய முடியும் என்பது பற்றியும், காய்களின் நகர்வு முறைகள் பற்றியும் ஆராயலாம். ■

---

வெற்றியின் இரகசியம் நோக்கத்தை அடையவேண்டுமென்ற மாறாத நிலையாகும் - டிஸ்ரேலி

***The secret of success is constancy to purpose - Disraeli***

---

## 9 கோள்களின் ஒழுங்கினை ஞாபகம் வைத்திருக்க ஒரு இலகு வழி

| | |
|---|---|
| **M**y | Mercury |
| **V**ery | Venus |
| **E**ducated | Earth |
| **M**other | Mars |
| **J**ust | Jupiter |
| **S**howed | Saturn |
| **U**s | Uranus |
| **N**ine | Neptune |
| **P**lanets | Pluto |

My Very Educated Mother Just Showed Us Nine Planets.

# நூலகம்

## அக்னிச் சிறகுகள் (Wings of fire)




இந்தியாவின் ஏவுகணை மனிதர், குடியரசுத்தலைவர் அவுல் பக்கீர் ஜெயினுலாப்தீன் அப்துல்கலாம். பாரதத்தின் தென்கோடியில் இராமேஸ்வரத்தில் ஏழ்மையான இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்து, வடக்கே புதுடில்லி அதிகார மையத்தில் ஜொலிக்கும் தமிழ் வைரம்.

தன் அன்பான அன்னை பற்றிய கவிதையுடன் மெல்ல விரிகிறது "அக்னிச் சிறகுகள்". சிறுபராயக் கனவுகள், உயர்த்திய ஆசான்கள் என அனைவரையும் வருடும் சிறகசைவால் உண்டாகும் காற்று இதமானது. நவீன இந்திய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இரண்டறக் கலந்து கிடக்கின்றது கலாமின் வாழ்க்கை. ஆய்வுகூடங்களிலும், ஆய்வுகளிலும் அமிழ்ந்துள்ள அவ்வாழ்க்கை பற்றி அறிவதிலென்ன ஆவல்?

வெறும் விமானப் பொறியியல் பட்டதாரி, தனது அனுபவ அறிவையும், அறிவியற் பிரயோகத்தையும் மட்டும் கொண்டு இந்தியாவை வல்லரசாக வானத்தில் வேலி போட வைத்தமையே அச்சிறப்பு. உரிய முறையில் பிரயோகித்தால் அறிவு எப்படிப்பட்ட அற்புத அறுவடையைக் கொடுக்கும் என்பதற்கு இந்தியாவின் திரிசூல் (திரிசூலம்), நாக் (நாகபாம்பு), ஆகாஷ் (வானம்), பிருத்வி (பூமி), அக்னி (நெருப்பு) ஆகிய ஏவுகணைக் காவலர்கள் சாட்சி.

அப்துல்கலாம் கடந்து வந்த பாதை கல்லும்முள்ளும் நிரம்பியது. தளராத உறுதி, முழுமையான ஈடுபாடு, சிறப்பான தலைமைத்துவம், கடும் உழைப்பு என அவரது சிறப்புக்கள் நீண்டுகொண்டே செல்கின்றன. பூச்சியத்திலிருந்து தொடங்கி, இந்தியாவின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வளங்களை ஒருங்கிணைத்து பூமியின் கூரையில் தோரணம் கட்டுகிறார் கலாம்.

கடும் வேலையின் பின் ஒரு பின்னிரவில் கலாம் கிறுக்கிய வரிகள்

நீண்ட நாள்முழுவதும்
கணத்திற்கு கணம்
நேர்மையாய், துணிவாய்
உண்மையாய், உழைக்கிறவன்
கரங்களே அழகிய கரங்கள்.

இப்படிப் பல கவித்துவமான வரிகள் சீறி வரும் வானவேடிக்கைகளாய் அக்னிச் சிறகுகளின் அசைவில் வந்து விழுகின்றன.

அப்துல் கலாமின் அடுத்த திறமை மிகவும் கவனிக்கத்தக்கது. முகாமைத்துவம் சார்ந்தது. சிறப்பான அணிகளை அமைப்பதும், அவற்றிற்குரிய பணிகளைப் பகிர்ந்து கொடுப்பதுமே அச்சிறப்புத் தன்மை.

அதனாற்தானோ என்னவோ திரிசூல் திட்ட இயக்குநர்களில் ஒருவர் படும்பாட்டை

காலம் நெருங்குகின்றது;
பணிந்திட்டப் பட்டியலோ
தலைமுதல் கால்வரை
என்னைப் பைத்தியமாய் விரட்டும்.

அவற்றை வழங்குவதும்

▶

கவலை யளிக்கும் காரியம்.
இவர்கள் எதற்காவது
தீர்வு காண்பார்களா
என்பது சந்தேகமே.

விடுமுறை நாள்களிலும்
இரவு நேரங்களிலும்
காத்திருக்கும் குடும்பம்
வெறுத்துச் சலித்துவிட்டது.
குடும்பம் சண்டையிடத்
தயாராக இருக்கிறது.

கை அரிக்கிறது.
தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள முயன்றால்
அட அநியாயமே!
அங்கே முடியே இல்லை...

என்று கலாமின் நண்பர் கவிதை எழுத கலாமோ ஹாயாக "என்னுடைய அற்புதமான அணிகளிடம் எனது எல்லாப் பிரச்சனைகளையும் ஒப்படைத்து விட்டேன். இதன் பலனாக என் தலைமுடி செழித்து வளர்ந்திருக்கிறது" என்று கூறுகிறார்.

அக்னிச் சிறகுகள் - வேதம். நாம் அனைவரும் ஊறித்திளைக்க வேண்டிய சுயசரிதம்.

**— கரிகாலன்** ■

---

## Autobiography (சுயசரிதை)

ஒருவர் எழுதும் நினைவுக் குறிப்புக்கள் (memories), நாட்குறிப்பு (Journal), குறிப்பேடு (Diary), கடிதங்கள் போன்ற இவை அனைத்தும் சுயசரிதையில் அடங்கும். ஏனெனில் இவை தன்னைப் பற்றிய செய்திகளை வெளிப்படுத்தும் ஓர் இலக்கிய வகையைச் சேர்ந்தவை. அறிந்தோ அறியாமலோ இவற்றின் ஆசிரியர் தம்மைச் சிந்திப்பதிலேயே இவை ஒவ்வொன்றின் சிறப்பும் உள்ளது. சுயசரிதை, நினைவுக் குறிப்பு என்பன ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டாலும், எழுதுபவரின் பண்பினையும் அவரது வாழ்வின் பிற நிகழ்ச்சிகளையும் குறிக்கும் பொழுது இவை இரண்டையும் வேறுபடுத்தலாம்.பொதுவாக, ஆசிரியர் தம் வாழ்க்கைக் குணாதிசயங்களுக்கும், செயல்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது நினைவுக் குறிப்பு. சுயசரிதை என்பது எழுதுபவரின் அக நோக்கு (introspection) அல்லது அவர்தம் காலத்தின் பரந்த பின்னணியில் தம் வாழ்க்கையில் அவர் கண்ட சிறப்புக்களைக் கதைப்போக்கில் தொடர்புகளைக் கூறுவது. நாட்குறிப்பு, குறிப்பேடு அவற்றின் இயல்பு நாம் அறிந்ததே. இவற்றில் நிகழ்ச்சிகள் கோவையாக இருப்பதில்லை. நிகழ்ச்சிகளை பின்னோக்கி ஆராய்ந்து குறிப்பதும் கிடையாது.கலைத்திறனும் அமைப்பும் தொடர்ச்சியும் இல்லாத குறையை இதன் வெளிப்படையானதும் (frankness) உடனுக்குடன் குறிப்பிடுவதுமான (Immediacy) தன்மை நிறைவு செய்கிறது.

நாட்குறிப்பு, குறிப்பேடு என்பன அவற்றின் மூலத்திலும் அடிப்படைப் பொருட்களிலும் ஒன்றேயாகினும் வாழ்வின் புறநிலைப் பண்பிலும், ஆழ்ந்த சிந்தனை நோக்கிலும் நாடகுறிப்பு என்பது குறிப்பேட்டைவிட எழுதுபவரின் வாழ்க்கையிலிருந்து விலகி நிற்கும்.

# தமிழர்களிற்கு பெருமை சேர்க்கும் கலைஞன்

கனடாவில் இருந்து வருகை தந்த நந்தா கந்தசாமியின் "புதிய வெளி" ஓவியக்காட்சி அண்மையில் (12, 13, 14/ மார்கழி/ 2003) நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. கணினி தொழில் நுட்பத்தின் மூலம் வரையப்பட்ட இவ் ஓவியங்கள் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்ல வாரத்தில் குறைந்தது மூன்று ஓவியக் கண்காட்சிகளால் விருந்தளிக்கும் கொழும்பு நகரிற்கு கூட புதிய வருகைதான்.

வர்ணங்களோ, வரைதாளோ, கன்வஸ்சோ பௌதீக நிலையில் இல்லாமல் Photo shop ஐயும், கணினியில் Pixel Vector என்ற கருவியையும் பயன்படுத்தி வரையப்பட்ட ஓவியங்களே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நந்தகுமார் 1992இல் கனடாவிற்கு அகதியாகச் செல்கின்றனர். யாழ்ப்பாணத்தில் சிறுவனாக இருந்தபோது தந்தையார் வரையும் கோயில் சுவர் ஓவியங்கள் தன்னைப் பாதித்ததாகவும்; 7 வயது முதல் கறுப்பு நிற போல் பொயின்ட் பேனாவால் படங்கள் வரைய ஆரம்பித்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

இவரது ஓவியங்கள் உயிர் நிழல், தூண்டில், மனிதம், சமர், கனவு, சுவர், தோழி, .................. முதலான சஞ்சிகைகளின் அட்டைகளை அலங்கரித்துள்ளன.

விவரணப்படம் ஒன்றைத் தயாரிக்கும்போது அவர் தெரிவித்த கருத்துக்கள் சில. "கணினி மூலம் ஓவியங்களை வரைந்தாலும் கனடாவில் பொருட்களை வாங்கும்போது கிடைக்கும் மட்டையின் ஒரு பக்கத்தில் கறுப்புமையால் ஓவியங்களை வரைவேன். புலம் பெயர்ந்த நாடுகளில் ஓய்வுநேரம் கிடையாது. பெரும்பாலான ஓவியங்களை நித்திரை செய்வதற்கான நேரத்திலேயே...... வரைகிறேன். எனது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து வீட்டிற்கு அழைத்துவரச் சென்றால்; அவர்கள் வரும்வரை காத்திருக்கும் நேரத்தில் காரில் இருந்து ஓவியங்களை வரைவேன். பொதுநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில்; என்னால் அந்த நிகழ்வுடன் ஈடுபாடு கொள்ள முடியாதபோது; அங்கிருந்தே வரையத் தொடங்குவேன். எங்கு சென்றாலும் பேப்பரும் (மட்டை) பேனாவும் இருக்கும். ஓவியப்பயிற்சியை, எந்தப் பல்கலைக்கழகத்திலும் பயிலவில்லை. நானே எனக்கு ஆசிரியராக இருக்கிறேன். கனடாவிலும் வேறு நாடுகளிலும், ஓவிய சிற்பக் காட்சிகளைப் பார்க்கின்றேன். அதற்கூடாக அனுபவங்களையும் பாதிப்பையும் பெறுகின்றேன்.

1993இல் ரொரான்ரோ நகரில் Suffering of my people (துயரப்படுகின்ற எனது மக்கள்) என்ற தலைப்பில் 1983 - 1993 வரையான எனது ஓவியங்களை கண்காட்சியில் வைத்தேன்.

எனது ஓவியங்களைப் பார்த்து தமிழர் அல்லாத பிறர் (ஆப்பிரிக்கன்ஸ், ஏசியன்ஸ்) அழுதார்கள். யுத்தத்தின் அவலமும் துயரும் நாடுகளை இனங்களைக் கடந்தது. அதேபோல் ஓவியமும் மொழிகளைக் கடந்து அனைவருடனும் உணர்வைப் பகிரவல்லது.

▶

எனது ஓவியம் ஒன்றை இந்தியர் ஒருவர் விலை கொடுத்து வாங்க முற்பட்டார் என்னால் அதற்கு விலை கூறவோ, விற்கவோ முடியவில்லை. என்னால் விலை என்ற ஒரு பக்கத்தைப் பற்றி சிந்திக்கவே முடியவில்லை. நான் எனக்காக வரைகின்றேன். என்னைப் பாதித்தவற்றையே ஓவியமாக்குகின்றேன்.

எனது ஓவியங்களைப் பார்த்துவிட்டு பாராட்டி தெரிவிக்கப்படும் விமர்சனங்களை விட கறாராக முன்வைக்கும் எதிர் விமர்சனங்களையே விரும்புகின்றேன்.

ஓவியங்களிற்கு நான் தலைப்பு இடுவதை விரும்புவதில்லை. அது பார்வையாளனை குறிப்பிட்ட கோணத்திலே பார்க்கவைக்கும். எனது ஓவியங்களை இப்படித்தான் பார்க்க வேண்டும் என்று பார்வையாளன் மீது எனது கருத்துக்களைத் திணிக்க முடியாது. ஓவியத்தை கீறியபின்பு அது பார்பவருக்கும், ரசிப்பவனுக்கும் உரியதாகின்றது.

இங்குள்ள இளம் மாணவர்களிற்கு நான் சொல்வது; நீங்கள் ஓவியங்களை ரசிக்க வேண்டும். நிறங்கள் ஓவியங்கள் மீதான ஈடுபாடு இயல்பாக வர வேண்டும். சிலருக்கு பாடுவதும், வேறு சிலருக்கு கீறுவதும் இயல்பாகவரும். எதையும் கூர்ந்து அவதானிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். இங்கு போதிய நேரம் உண்டு. அதனை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்.



*முகவரி : Nanda Kandasamy*
*307 - 47 Thorncliffe Park Drive*
*Torontro Ontario,*
*MAH 1J5*
*416 425 67 42 phone*
*n_kandasamy@hotmail.com*

■

---

**Biography** (வாழ்க்கை வரலாறு)

'குறிப்பிட்ட மனிதர்களின் வாழ்க்கை வரலாறு' என்றே ட்ரைடன் என்ற ஆங்கில அறிஞர் இத்தொடருக்கு வரையறை தந்தார். கூடுமான வரை தனி மனிதன் ஒருவனின் வாழ்க்கையின் முழுவிபரங்கள், அவனது மனப்போக்கு, பண்பு நலன்கள், சூழல் அனுபவங்கள், செயல்கள் ஆகிய இவை அனைத்தையும் உள்ளடக்கிய இலக்கிய முயற்சி.

தற்போது வாழ்க்கை வரலாறு மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றது. தற்காலத்து வாழ்க்கை வரலாற்று நூல்கள் இரண்டு வடிவங்களில் வருகின்றன.

1. புறச்செயல்கள், மெய்யான செய்திகள், நிகழ்ச்சி மிக்க நாட்கள் ஆகியவற்றைத் தருவதால் ஒரு தனி நபரின் மெய்யான போக்கு அல்லது தன்மையை முழுவதுமாக வடித்துத்தர இயலாது என்று கருதுகின்ற உளவியல் அடிப்படையில் அல்லது விளக்கம் தரும் அடிப்படையில் அமையும் வரலாற்று நூல் வடிவம்.
2. கலைச்சுவை தோய்ந்த வாழ்க்கை வரலாற்று நூல், நாவலுக்குரிய வழிகள் அனைத்தையும் கையாண்டு ஒருவரது வாழ்க்கை எப்படி வாழப்படுகின்றதோ அப்படியே தருவது போன்ற தோற்றத்ததை ஏற்படுத்துவது.

# மூங்கில் (Bamboo)

தாவரவியற்துறை,
யாழ் பல்கலைக்கழகம்

மூங்கில் பின்வருமாறு பாகுபடுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| *Division* (பிரிவு) | *: Embryophyta* |
| *Subdivision* (உபபிரிவு) | *: Angiospermae* |
| *Class* (வகுப்பு) | *: Monocotyledoneae* |
| *Order* (வருணம்) | *: Glumiflorae* |
| *Family* (குடும்பம்) | *: Graminae* |
| *Subfamily* (உபகுடும்பம்) | *: Bambusoidae* |
| *Genus* (சாதி) | *: Bambusa* |

இலங்கையில் மூங்கிலின் ஐந்து இனங்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் மூன்று இலங்கைக்குரிய இனங்களாகும். ஏனைய இரண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட இனங்களாகும். எமது பாரம்பரிய உற்பத்திகளான கூடைகள், புல்லாங்குழல், அழகுப் பொருட்கள் ஆகியன இலங்கைக்குரிய மூன்று மூங்கில் இனங்களிலிருந்து பெறப்படுகின்றன.

## *Native Bamboo species and their Distribution*

(இலங்கைக்குரிய மூங்கில் இனங்களும் அவற்றின் பரம்பலும்)

| பெயர் | விட்டம் | பரம்பல் |
|---|---|---|
| *Ochlandra stridula* | *1 - 2.5 cm* | தாழ்நில ஈரவலயப் பகுதி |
| *Davidsea attenuata* | *1 - 2.5 cm* | ஈரவலம், இடைவெப்ப வலயம், மலைகள் |
| *Pseudoxytenanthera manadelpha* | *1 - 2.5 cm* | ஈரவலம், இடைவெப்ப வலயம், மலைகள் |

அறிமுகப்படுத்தப்பட்ட இரு மூங்கில் இனங்களான *Bambusa vulgaris* உம் இராட்சத மூங்கில் (*Dendrocalamus giganteus*) உம் வீட்டுத் தோட்டங்கள், வீதியோரங்கள், ஆற்றங்கரைகளிலும் காணப்படும்.

மூங்கில்கள் மண்ணரிப்பைக் குறைப்பதால் ஆற்றங்கரைகளிலும் சிற்றாறுகளினருகிலும் பொதுவாக நடப்படுகின்றன. மூங்கிலைச் சேகரித்துக் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடுதல் பிரம்புக் கைத்தொழிலுடன் ஒப்பிடும்போது குறைவாக உள்ளது. ஈரவலயப் பகுதிகளில் 10 - 50% வரையான கிராமத்தவர்கள் மூங்கிலைப் பயன்படுத்தி சிறுகைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். மூங்கில் இனங்களின் பரம்பல் ஈரவலய, இடைவெப்ப வலயங்களிற்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் உலர் வலயங்களில் வசிக்கும் மக்கள் இக்கைத் தொழிலில் தங்கியிருப்பதில்லை.

மூங்கில் வேலிகளை அமைப்பதற்கும் நீர் செல்லும் குழாய்களை அமைப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றது.

இலங்கையில் பேராதனை தாவரவியல் பூங்காவின் உள்ளே ஆற்றின் வலதுபக்கக் கரையில் மூங்கில்கள் கூட்டமாக உள்ளன. உலகிலேயே பெரியதெனக் கருதப்படுகின்ற இராட்சத மூங்கிலைக் (*Dendrocalamus giganteus*) காணலாம். இதன் தண்டின் விட்டம் 20 *- 25cm, 30 - 40m* உயரம் வரை வளரும். புதிய அங்குரங்களின் சராசரி வளர்ச்சி வீதம் 30cm / நாள். அத்துடன் மஞ்சள் கட்டிட மூங்கில் (*Bambusa vulgaris*) உம் சிறகுஇலை மூங்கில் (*Dendrocalamus membranaceus*) உம் முள் மூங்கில் (*Bambusa spinosa*) உம் காணப்படுகின்றது. ■

# ஹிப்போகிரட்டிஸின் உறுதி மொழி

நல்ல இருட்டு. ஊசி விழுந்தால் கேட்குமளவுக்கு நிசப்தம். திடீரென ஒளிப்புள்ளிகள். ஒன்று இரண்டாகி, பத்தாகி, – அதிகரிக்கின்றன. இப்போது பல மெழுகுதிரி வெளிச்சங்கள். திடீரென ஒரு குரல் ஒலிக்க அதை மௌனமாக மனதுள் பற்பல குரல்கள் எதிரொலிக்கின்றன. மாவீரர் தினத்தை நினைவுக்கு இட்டுவரும் இந்நிகழ்வு நடப்பது யாழ். மருத்துவபீடம். வருடாந்தம் தமது மருத்துவக் கற்கையை முடித்து வெளியேறும் மாணவர்கள் தமது வைத்திய சேவையைத் தொடங்குமுன் எடுத்துக் கொள்ளும் ஹிப்போகிரட்டிஸின் உறுதி மொழி இவ்வாறு தான் நடைபெறும்.

"நவீன மருத்துவத்தின் தந்தை" எனப் போற்றப்படும் ஹிப்போகிரட்டிஸ் (Hippocrates) (கி.மு. 460 – 377) கிரேக்கத்தின் மருத்துவமாமேதை. பிறந்தது கொஸ் (Cos) தீவில். நோய்கள் அந்தக்காலத்தில் நம்பப்பட்டதுபோல கெட்ட ஆவிகளாலோ, கடவுளின் சாபத்தாலோ ஏற்படுவன அல்ல என்று அடித்துக் கூறிய இவர் குணங்குறிகளின் அடிப்படையில் அவற்றை ஆராயும் வழக்கத்தைத் தொடக்கி வைத்தார். இந்த அறிவியல் பூர்வமான பார்வையே நவீன மருத்துவ வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. கிரேக்கம் முழுவதும் அலைந்து தனது அறிவை விரித்துக் கொண்ட ஹிப்போகிரட்டிஸ் தான் பிறந்த மண்ணை மறக்காமல் அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியையும் நிறுவினார். அக்காலத்தில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு குழாமாக இயங்கிய மருத்துவர்கள் எடுப்பதற்கான ஒரு உறுதி மொழியை வடிவமைத்தார். அதுவே இன்று ஹிப்போகிரட்டிஸின் உறுதிமொழி என அழைக்கப்படுகின்றது.

நவீன காலத்திற்கு ஏற்றவாறு அதன் உட்கிடக்கை மாறாது புதுமெருகேற்றப்பட்டுள்ள அந்த உறுதிமொழி வருமாறு

"எனது மருத்துவ அறிவை மானுட குலத்தின் நன்மைக்கே உபயோகிப்பேன் என உறுதி கூறுகின்றேன். நோயாளிகளே எனது முழுமுதற் கவனத்திற்குரியவர்கள். அவர்களது குறைகளைக் கரிசனையுடன் கேட்பேன். அவர்களை என்னால் முடிந்தவரை அக்கறையுடன் கவனிப்பேன். அவர்களை அனுதாபத்தோடும், உண்மையோடும், மரியாதையுடனும் நடாத்துவேன்.

அவசர நிலைகளில் மருத்துவ உதவி தேவைப்படும் எவராயினும் அவருக்கு உதவ என்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன். தமது மருத்துவ தேவைகள் பற்றி அறியாத ஏழை எளிய மக்கள் உள்ளடங்கலாக அனைத்து நோயாளிகளதும் உரிமைகளை உறுதிப்படுத்த முயற்சிப்பேன்.

எனது நோயாளியின் சமூகப் பின்புலம் பற்றியோ, அரசியல் சார்நிலை பற்றயோ கடுகளவும் கருத்தில் எடுக்காது, எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுதந்திரமாக முடிவுகளை எடுப்பேன். நோயாளிக்கான எனது சேவையில் சுய இலாபமோ, சுய முன்னேற்றமோ செல்வாக்குச் செலுத்த இடமளியேன்.

மானுட வாழ்வின் மேன்மையை நான் அறிவேன். ஆனால் மனித ஆயுட்காலத்தை நீட்டிப்பது மட்டுமே உடல் நலம் பேணலின் நோக்கம் ஆகாது என்பதனையும் அறிவேன். மருத்துவ விழுமியங்களுக்கும், சட்டங்களுக்கும் உட்பட்டே கருக்கலைப்புச் செய்வேன்.

சிகிச்சை பற்றிப் பூரணமாக அறிந்து, அதனைப் பெற நோயாளி மறுத்தாலோ, பயனற்ற அல்லது தீங்கிழைக்கும் சிகிச்சையையோ நான் அளிக்கமாட்டேன். நோயாளி ▶

தகவல்களை அறிந்து கொள்ளவும், அவர்களது நலன் பற்றி அவர்களே தீர்மானிக்கவும் துணை புரிவேன்.

மற்றவர்களுக்கு பெருந்தீங்கு நேராத வரை, நோயாளிக்கு என்னால் முடிந்தவரை உண்மை உரைப்பேன், நோயாளியின் முடிவுகளை மதிப்பேன். நோயாளியின் வேண்டுகோளுக்கு இணங்க முடியாதவிடத்து அதற்கான காரணங்களை விளக்குவேன். எனது நோயாளி மட்டுப்படுத்தப்பட்டளவு அறிவைக் கொண்டிருப்பினும், அவர்களால் முடிந்தளவு முடிவுகளை எடுப்பதில் பங்கேற்க ஊக்குவிப்பேன்.

எனது நோயாளிகள் பற்றிய தகவல்களை முடிந்தவரை இரகசியமாய்ப் பேண முயற்சிப்பேன். இரகசியம் பேண முடியா நிலமைகளில் அதற்கான காரணங்களை விளக்கமாய்த் தெரிவிப்பேன்.

எனது அறிவின் எல்லையை நான் அறிந்துள்ளேன். தேவையேற்படின் சக மருத்துவர்களின் ஆலோசனையைப் பெறுவேன். தவறுகளை ஒத்துக் கொள்வேன்.

துறைசார் புதிய முன்னேற்றங்களை எனது சகாக்களும் நானும் அறிந்துகொள்ள இயன்றதனைத்தையும் செய்வேன். தாழ்ந்த தரங்களும், தவறான நடைமுறைகளும் முன்னேற்றப்பட உதவுவேன்.

என்னுடன் பணியாற்றும் அனைவரையும் நான் மதிப்பேன். எனக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்குப் போதிப்பதன் மூலம் அறிவைப் பகிர நான் தயாராயிருப்பேன். நான் பணியாற்றும் சமூக முன்னேற்றத்திற்காக நான் பெற்ற பயிற்சியையும், துறை சார் திறமையையும் உபயோகிப்பேன்.

எனது நோயாளிக்குப் பொருத்தமான சிகிச்சையளிப்பேன். உடல் நலத்துறை வளங்கள் உரிய முறையில், மனிதாபிமானத்துடன் நியாயபூர்வமாகப் பகிர்ந்து விநியோகிக்கப்பட ஆதரவளிப்பேன். மக்கள் நலனைப் பாதிக்கும் கொள்கை வகுப்பாளர்களை எனது செல்வாக்கினைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துவேன்.

சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை மதியாது பிறம் கொள்கைகளை எதிர்ப்பேன். நோயாளர் நலத்தைப் பாதிக்கும், துறைசார் விழுமியங்களை உதாசீனப்படுத்தும் சட்டங்களை மாற்றியமைக்க கடுமையாக முயற்சிப்பேன்.

இவ் உறுதிமொழிக்குக் கட்டுப்பட்டு நான் நடப்பேன். இதனால் வாழ்வை மகிழ்ச்சியாக நடாத்தவும், துறையில் சிறப்புடன் செயற்படவும் என்னால் முடியும். எனவே எல்லோராலும் எப்போதும் போற்றப்படுவேன்". ■

*கெ. இந்திரமோகன், மருத்துவபீடம்*

---

**Telepathy (உள்ளுணர்வுத் தொடர்பு)**

அனைவருக்கும் தெரிந்த வகையாலின்றி, உள்ளுணர்வால் ஒருவருக்கு ஒருவரோ, ஒருவர் பலருடனோ தொடர்பு கொள்வது.

**Transcendental Meditation (ஆழ்நிலை தியாணம்)**

மேற்கத்திய நாடுகளில் பரவியுள்ள இந்திய ஆன்மீகக் கொள்கை. மகரிஷி மகேஷ்யோகியால் 1958 – இல் இது நிறுவப்பட்டது. அறிவியலே அடிப்படையானது என்றும், மனதை உள்ளுக்குள் ஈர்க்கம் ஆற்றல் வாய்ந்தது எனவும், கூடுதலான அறிவையும், ஆற்றலையும் தர வல்லது என்றும் இத்தியானத்தைப் பற்றிக் கூறுவர்.

# நாம் உண்ணும் சோயா . . . ?

சோயா விதையில் மாச்சத்து மிகக் குறைவு. அதில் எண்ணெயும் புரதமும் நிறைய உண்டு. 15 - 22 வீதம் எண்ணெய், 30 - 40 வீதம் புரதம் என்பது அதன் அளவீடு. கல்சியம், இரும்பு, பொட்டாசியம், பொஸ்பரஸ் என்பனவுடன் விற்றமின் ஏ யும், பி யும் சோயாவிதையில் காணப்படுகின்றது. 4000 வருடங்களிற்கு மேலாக சீனா, ஜப்பான் ஆகியவற்றின் தேசிய உணவாக சோயா பயன்படுகின்றது.

சோயா தொடர்ச்சியாக உண்பவர்களுக்கு புற்று நோய் வருவதில்லை. ஆண்களைத் தாக்கும் சுக்கிலப் பெருஞ்சுரப்பி புற்றுநோய், பெண்களைத் தாக்கும் மார்புப் புற்றுநோய் என்பன சீனா, ஜப்பானிய மக்களைப் பீடிப்பதில்லை. அமெரிக்காவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோயா உட்கொள்ளப்படுகின்றது. ஜப்பான், சீன மக்கள் இதைத்தவிர்த்து யாதொரு மாற்றமும் செய்யப்படாத இயற்கை வகையையே உண்ணுகிறார்கள். சீனா, ஜப்பான் மக்கள் தமது நாளாந்த உணவில் விதம் விதமாகத் தயாரிக்கப்பட்ட சோயா உணவை உட்கொள்கிறார்கள். சோயாவில் நார்ச்சத்து நிறைய இருப்பதால் அவர்களுக்கு குடல் நோய்கள் வருவதில்லை.

சோயாவில் ஜப்பானியர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை மிகவும் உயர்வானது. மிசோ என்ற ஒரு வகை சூப்பை அவர்கள் உண்பதுதான் அவர்களுடைய நெடிய வாழ்வின் இரகசியம் என்று சில மேற்கத்திய விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நொதிக்கவைக்கப்பட்ட சோயாக் கரைசலிலும், அரிசி, பார்லி, கடலுப்பு போன்றவற்றை கலந்து ஒரு தடித்த பசையாக செய்து வைத்துக் கொள்கிறார்கள். தேவைப்படும்போது இதில் சுடுநீரைக் கலந்து உட்கொள்வார்கள் அல்லது ரொட்டியில் பூசி உண்பார்கள். மிகவும் வயது கூடியவர்கள் வாழும் ஒகிநாவா தீவில் மிசோ சூப் ஒவ்வொரு நாளும் உணவாக்கப்படுகின்றது. காலை உணவோடும், இரவில் படுக்கச் செல்லும்போதும் மிசோ அருந்தும் வழமை பெரும்பாலான ஜப்பானியர்களுக்கு உண்டு.

மிசோவின் மூலப்பொருள் சோயா என்றால் மிகையாகாது. உயர் இரத்தஅழுத்தத்தை மிசோ குறைக்கின்றது. கொலஸ்ற்ரோல் உருவாவதை அது தடுக்கின்றது. நொதித்த மிசோ சீரணத்தை வலுப்படுத்துகின்றது. ஜப்பான் அரசின் தேசிய புற்று நோய் ஆய்வு நிலையம் வெளியிட்ட அறிக்கையின் படி இருதய நோய், புற்றுநோய், ஈரல் நோய், முதுமை என்பனவற்றின் தடுப்ப அரணாக மிசோ இடம் பெறுகின்றது. சோயாவின் ஒரு வகை இரசாயனம் இருந்துகொண்டு புற்று நோயை உருவாக்கும் கலங்களை அழிப்பதாகவும் இந்த அறிக்கை கூறுகின்றது.

*எமது பகுதிகளில் சோயாமீற் என்ற பொதி செய்த மரக்கறி விற்பனைக்கு விடப்படுகின்றது. இது இயற்கை உணவல்ல. இது பல சத்துக்கள் அகற்றிய பின் எஞ்சிய சக்கை எனலாம். பழுதடையாமல் இருப்பதற்காக இதில் சில அந்நியப் பொருட்கள் கலக்கப்பட்டுள்ளன. சமைக்கமுன் இரு தடவை சுடுநீரில் ஊற வைத்துப் பிழிய வேண்டும். மஞ்சள் நிறத்தில் நச்சுப் பொருட்களான பீடைநாசினிகள் நீரோடு வெளியேறும். கழுவாமல் சோயாமீற் சமைப்பது மிகவும் ஆபத்தானது. சோயாவை நாமே பயிரிட்டு, எமது தேவைகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே நற் பலனைப் பெறமுடியும்.* ■

- ✷ வாழைப்பழத்தில் விற்றமின் A, B, C, D, E ஆகிய விற்றமின்கள் உள்ளன.
- ✷ "இனிப்பான கொலையாளி" என அழைக்கப்படும் "சீனி" 77 விதமான நோய்களுக்கு காரணமாக விளங்குகின்றது.

# நேற்று இன்று நாளை

- மாணவர் பக்கம் -

சி.சேயந்தன்
10 A
யா/ உ. அ. க.

"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லதுமாவது கெட்டதுமாவது அன்னை வளர்பினிலே" மட்டு மல்லாது அக்குழந்தை வளரும் சமுதாயத்தையும் சாரும். சமுதாயத்தை எடுத்து நோக்கையில் நேற்றைய, இன்றைய, நாளைய சமுதாயத்தை நோக்குவோம்.

நேற்றைய சமுதாயத்தை எடுத்துநோக்குவோமானால் நேற்றைய சமுதாயம் உழைப்பையும் விவசாயத்தையும் கொண்டது. அக்காலத்தில் தெய்வ நம்பிக்கை காணப்பட்டது. விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானமே அன்றைய உணவிற்கு போதும். அவர்களால் விவசாயம் செய்யப்படவில்லை எனின் அவர்களுக்கு உணவில்லை. ஆதலால் அன்றைய சமூகம் உழைப்பை பெருமளவு மதித்ததுடன், விவசாயத்திற் கண்ணும் கருத்துமாய் இருந்ததால் அவர்கள் தீயவழியில் செல்வதற்கு வாய்ப்பில்லை ஆதலால் அவர்கள் அமைதியாகவும் வாழ்ந்தார்கள். நேற்றைய சமுதாயம் சிறந்து விளங்கியதற்கான காரணம் அவர்களிடம் நிலவிய ஒற்றுமையும் நோயின்மையும் ஆகும். அவர்களுடைய சூழல் சுத்தமாகவும் உண்ணும் உணவு போசாக்கானதாகவும் காணப்பட்டதால் இவர்களுக்கு நோய் ஏற்படுவது குறைவாக இருந்தது.

இன்றைய சமுதாயத்தை எடுத்து நோக்குவோமானால் இன்றைய சமுதாயத்தில் ஒற்றுமையில்லை, அமைதியில்லை, நோய்த்தாக்கம் என்பன அதிகளவில் காணப்படுகின்றது. ஒற்றுமையின்மை, அமைதியின்மைக்கான பிரதான காரணம் உள்நாட்டு இனப்பிரச்சனை; இனங்கள், சமயம்,சாதி என்பவற்றை கொண்டே இந்த யுத்தங்கள் ஏற்படுகிறது. தற்போது நோய்த்தாக்கம் கூடுதலாக காணப்படுவதற்கு மிகமுக்கிய காரணம் சனத்தொகை வள்ர்ச்சியும், சூழல் மாசடைவுமாகும். தற்போது உலகில் தீயபழக்கங்கள் பரவிவருகிறது. இது மேலைத்தேய சமுதாயத்தில் கூடுதலாகக் காணப்படுகிடுறது. மனிதர்களை சோம்பேறிகளாக்குவது "தற்போது உலகின் முடி சூடா மன்னனாக திகழும் கணினி ஆகும்" இதனால் மனிதர்கள் தமது மூளையை பயன்படுத்துவது குறைவாக காணப்படுகிறது. தற்போது போதைப்பொருட்களின் பாவனை அதிகமாக காணப்படுகிறது. இதனால் இன்றைய சமுதாயம் சீரழிந்து போகிறது.

நாளைய உலக சமுதாயம் நல்ல முறையில் சிறந்துவிளங்க வேண்டுமாயின் அதன் முழுப்பங்கும் உலக மக்களின் கையிலேயே தங்கியுள்ளது. முதலில் போதைப் பொருட்களின் பாவனையை குறைக்க வேண்டும். உள்நாடுகளில் இடம்பெறும் இனப்பிரச்சனைகளுக்கு சிறந்த தீர்வு காணவேண்டும். நாளைய சமுதாயம் இன்றைய சமுதாயம் போலல்லாமல் சிறந்த முறையில் சிறந்து விளங்க கடவுளை நாம் பிரார்த்திக்கவேண்டும்.

"அன்பு மலர்களே நம்பியிருங்கள் ஓர் வழி நின்று
நேர்வழி சென்றால் நாளை நமதே; இன்றும் நமதே" ■

## 44 வருட செவ்வாய்க்கிரக ஆய்வு

— துஷாரா

✷ 1960-ல் சோவியத் யூனியன் செவ்வாய் கிரகத்தை குறிக்கோளாகக் கொண்டு தன் முதல் இரண்டு விண்வெளி ஆய்வுக் கருவிகளை செலுத்தியது. ஆனால் அது பூமியின் ஆரம்ப சுற்றுப் பாதையையே அடைய முடியாமல் போய்விட்டது.

✷ ஜூலை 14, 1965-ல் ஐக்கிய மாகாணங்களிலிருந்து செலுத்தப்பட்ட மாரினர் - 4 செவ்வாய் கிரகத்தைக் கடந்து சென்று அதன் புகைப்படங்களையும் அளவுகளையும் பூமிக்கு அனுப்பியது.

✷ 1971-ல் மார்ஸ் 3 என்ற சோவியத் யூனியனின் விண்வெளி ஆய்வுக் கருவி ஒரு பெட்டகத்தை இறக்கியது. குறைந்த விசையுடன் முதன் முதலில் செவ்வாய் கிரகத்தில் இறங்கியது இதுவே. அதே வருடத்தில் மாரினர் 9 என்ற ஐ.மா விண்வெளி ஆராய்ச்சி கருவி செவ்வாய் கிரகத்தை அடைந்து அதன் மேற்பரப்பின் பெரும் பகுதியை புகைப்படம் எடுத்தது. மாரினர் 9 அந்த கிரகத்தின் இரண்டு துணைக் கோள்களான ஃபோபொஸையும் டெய்மோஸையும் கூட புகைப்படம் எடுத்தது.

✷ ஐ.மா- வின் வைக்கிங் 1 மற்றும் வைக்கிங் 2. 1976-ல் செவ்வாய் கிரகத்தில் தரை இறங்கியது. இவை இரண்டும் பல வருடங்களாக இயங்கி, உயிரிகளை கண்டுபிடிப்பது போன்ற நுணுக்கமான பரிசோதனைகளை செய்யும்படி வடிவமைக்கப்பட்டது. என்றாலும், இவை உயிர்கள் இருப்பதற்கான எந்த ஆதாரத்தையும் கண்டுபிடிக்கவில்லை.

✷ 1988-ல் சோவியத் விஞ்ஞானிகள் ஃபோபொஸ் 1 மற்றும் ஃபோபொஸ் 2 என்ற இரண்டு என்ற விண்கலத்தை செவ்வாய் கிரகத்திற்கு செலுத்தினர். ஃபோபொஸ் 1 செயலிழந்தது. ஆனால் ஃபோபொஸ் 2 செவ்வாய் கிரகத்தை அடைந்து அதன் கண்டுபிடிப்புக்களை பல நாட்களாக பூமிக்கு அனுப்பியது.

✷ 1992-ல் ஐக்கிய மாகாணங்கள் மார்ஸ் அப்சர்வர் என்ற விண்வெளி ஆய்வுக் கருவியை செலுத்தியது. ஆனால் அது தன் பணியை செய்ய முடியாமல் போய்விட்டது.

✷ மார்ஸ் பாத்ஃபைன்டர், சோஜொனர் ஊர்தியையும் எடுத்துக் கொண்டு ஜூலை 4, 1997ல் செவ்வாய் கிரகத்தில் தரை இறங்கியது. சிவப்பு கிரகத்தின் மேற்பரப்பிலிருந்து திகைக்க வைக்கும் கலர் புகைப்படங்களை எடுத்து ஆனுப்பியது.

✷ இறுதியாக 2004 ஜனவரியில் ஸ்பிரிட் ஒப்பசூனிட்டி என்ற இரு விண்கலங்கள் செவ்வாயில் தரையிறங்கி செவ்வாயின் தரைத்தோற்றம் பற்றிய ஆய்வை மேற்கொள்கின்றன.

*1997இல் பாத்பைன்டர் அனுப்பிய செவ்வாயின் அழகிய தரைத்தோற்றம்*



## புத்தரின் படுகொலை

(எம். ஏ. நு:.மான் M. A. Nuhman)



நேற்று என் கனவில்
புத்தர்பெருமான் சுடப்பட்டிறந்தார்
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது!

இரவின் இருளில் அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்

"இல்லை ஐயா
தவறுகள் எவையும் நிகழவே இல்லை!
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்...."
என்றனர் அவர்கள்.

"சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
*சிகாலோகவாத சூத்திரத்தினைக் கொழுத்தி
எரித்தனர்
புத்தரின் சடலம் அஸ்தியானது
*தம்ம பதமும்தான் சாம்பரானது. (1981)

* சிகாலோகவாத சூத்திரம், தம்மபதம் ஆகியன பௌத்த மத அறநூல்கள்

## *Murder*

*Translated from original (Tamil) by S Pathmanathan*
*மூலமொழி தமிழில் இருந்து*
*மொழிபெயர்ப்பு: எஸ். பத்மநாதன்*

*Last night*
*I had a dream*
*Lord Buddha was shot dead*
*by the police-*
*guardians of the low.*
*His body lay drenched in blood*
*on the step*
*of the Jaffna Library!*

*Under the cover of darkness*
*came the ministers.*
*"His name - not in our lists!*
*Why did you kill him?"*
*they asked in anger.*
*"No, sirs, no!"*
*There was no mistake.*
*Without bumping him off*
*it was impossible*
*to harm even a fly.*
*Therefore...*
*they stammered.*

*"Okay, okay!*
*Hide the corpse"*
*The ministers vanished.*

*The men in civvies*
*dragged the corpse*
*into the library.* ►

*They heaped the books,*
*rare and valuable,*
*ninety thousand in all*
*They lit the pyre*
*with the chikalokavada sutta.**
*Thus the remains*
*Of the compassionate One*
*were burnt to ashes*
*along with the Dhammapada.**

** Chikalokavada Sutta, Dhammapada are sacred Buddhist texts.*

*நன்றி - விபாஷா*

**கவிதை பற்றி . . .**

"உணர்ச்சி ததும்பும் கவிகளே
உயர்ந்தவை." *- வோர்ட்ஸ் வோர்த்*

"அனைவரிடத்திலும் கவிதையின் கூறு உண்டு
முற்றிலும் கவிதையின் கூறாக உள்ளவர் யாருமிலர்
கவிதையைச் சரியாக வாசிக்கக் கூடியவர்
யாவரும் கவிஞரே." *- கார்லைல்*

"உன்னிடம் கொஞ்சமாவது கவிதை
இல்லாவிட்டால் நீ எங்குமே
கவிதையைக் காணமாட்டாய்."
*- நீபெர்ட்*

**அறிவிசை இதழ் 01 இல் இடம்பெற்ற தவறுகள்**

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 04 | 6 | Assciation | Association |
| 05 | 25 | Gulivers travels | Gullivers travels |
| 06 | 7 | ரா. பி. சேதுப்பிள்ளையின் கவிதைகள் | ரா.பி. சேதுப்பிள்ளையின் கட்டுரைகள் |
| 10 | 30 | A typical | Atypical |
| 32 | 3 | ஏரியில் | ரயில் |
| 40 | 5 | விளைந்திருக்கும் | வளைந்திருக்கும் |
| 42 | 1 | ஜனாதிபதி | ஜனாதிபதி |
| 43 | 25 | gentel | gentle |
| 45 | 2 | thing | thinking |
| 45 | 9 | pritical | practical |

✷ எச்.ஐ.வி தடுப்பு ஊசி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதில் இறுதி மருந்தாகவே ரெனோபோவிர் (Teno fovir) என்னும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று இடம்பெற வேண்டும். இங்குTeno fovir என்பது விடுபட்டுள்ளது.

✷ பிழைகள் திருத்திய பின்னரும் கணினியில் ஏற்பட்ட தவறினால் எழுத்துப்பிழைகள் இடம்பெற்றுள்ளன. மன்னிக்க.

# ௨003 இலக்கியத்திற்கான நோபல் பரிசு – ஜே. எம். கோட்ஸி



உலகின் இருண்ட கண்டமான ஆபிரிக்க மண்ணிலிருந்து வந்த இலக்கியங்கள் கறுப்பு இலக்கியங்கள் என அழைக்கப்பட்டன. இலக்கியத்திற்கான சென்ற ஆண்டு நோபல் பரிசு தென்னாபிரிக்க எழுத்தாளர் ஜே.எம். கோட்ஸிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நாடின் கார்டிமர், நாகுப் மஃபாஸ், வோல் சொயின்கா ஆகிய ஆப்பிரிக்க நாட்டவர்களைத் தொடாந்து ஜே.எம்.கோட்ஸி இந்த விருதைப் பெறும் நான்காவது கறுப்பின எழுத்தாளர்.

தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் 1940 பெப்ரவரி 9ம் தேதி பிறந்த கோட்ஸியின் இளமைக்காலம் ஆங்கிலம் ஜெர்மன் என்ற இருமொழி பின்புலத்தில் உருவானது. இவரது தந்தை அரசாங்கத்தில் பணியாற்றி அரசுடன் ஒத்துப்போக முடியாததால் வேலையை இழந்தார். சுதந்திரமான மனப்போக்கு கொண்ட இவர் கோட்ஸியை ஒருவித ஆங்கிலத்தன்மையுடன் வளர்த்தார். கோட்ஸியின் சுயசரிதமான Boyhoods ல் அவரது உடல்நலமற்ற இளமைக்காலமும் வீட்டில் முடங்கி தனிமையிலிருந்தபோது புத்தகங்களைத் துணையாகக் கொண்டதும் விவரிக்கப்படுகிறது. தென்னாபிரிக்க இனவெறி அரசியல் இவரது மனதில் எதிர்ப்பின் விதைகளைத் தூவின. கேப்டவுன் பல்கலைக்கழகத்தில் கணிதமும் ஆங்கிலமும் பயின்ற கோட்ஸி தந்தையின் மேலாதிக்கத்தின் மேல் கடும் வெறுப்புணர்வு கொண்டார். இதிலிருந்து விடுபட தன்னைத்தானே நாடு கடத்திக் கொள்பவராய் கம்பியூட்டர் புரோகிராமிங் பயின்று லண்டனுக்குச் சென்றார். லண்டனிலும் அதன் அண்டை நகரங்களிலும் கடும் மனப்போராட்டங்களுக்கிடையே பணியாற்றினார். இங்குதான் அவரது இலக்கிய ஆளுமை உருப்பெறத் தொடங்கியது. பிறகு ஆஸ்டினில் உள்ள டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் பெக்கட்டின் எழுத்துக்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார். சிறிது காலம் கல்லூரி பேராசிரியராக பணியாற்றிவிட்டுப் பிறகு அமெரிக்கா சென்றார். அங்கு baffalore நகரில் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது அவர் எழுதிய இரட்டைக்கிளைக் கதையான ‘டஸ்லேன்சில்’ அமெரிக்க வியட்நாம் போர்ச்சூழலும் தென்னாபிரிக்க நிலப்பகுதி முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டதும் பின்புலமாக சித்தரிக்கப்படுகின்றன. பின்னர் தாய்நாடு திரும்பிய கோட்ஸி கேப்டவுன் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கிய ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்தார். இனவெறி பாகுபாடு உச்சத்திலிருந்த அந்த நாளில் அப்பல்கலைக்கழகம் வெள்ளையருக்கு மட்டுமானதாக இருந்தது. கோட்ஸி 2002இல் பேராசிரியர் பணியை உதறிவிட்டு ஆஸ்திரேலியாவிற்கு சென்றார். இப்போது அங்குள்ள அடிலைட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார்.

ஆஸ்திரேலியா புறப்படும் முன்பே கோட்ஸி பல புகழ்பெற்ற நாவல்களை எழுதிவிட்டார். இவற்றில் இரண்டு புக்கர் பரிசு பெற்றவை. அவையாவன ‘The life and times of michel K’, ‘Disgrace’. தான் வாழுமிடத்தை நாட்டைத் துறந்து செல்வது கோட்ஸிக்கு எப்பொழுதும் வேதனை மிகுந்த ஓர் அனுபவம். இவரது முதல் திருமணம் 1980இல் முறிந்தது. தனிமை விரும்பியான கோட்ஸி பெரும்பாலும் பத்திரிகையாளர்களைத் தவிர்த்து வந்திருக்கிறார். தனக்கு அளிக்கப்பட்ட புக்கர் பரிசுகளைக்கூட பெற்றுக்கொள்ள அவர் செல்லவில்லை.

கோட்ஸியின் எழுத்துக்கள் வழக்கமான வழிமுறைகளை உடைத்தெறிவதாகவும் ஒப்பிட இயலாததாகவும் கருதப்படுகின்றன. ■

# மார்வன் அத்தப்பத்துவின் பெருந்தன்மை!
## – அடம் கில்கிறிஸ்ட் ஆச்சரியம்!



இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் (24.02.2004) ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்ட தங்கள் அணி வீரர் அண்ட்ரு சிமொண்ட்ஸை நடுவர் திருப்பியழைத்து ஆட அனுமதித்தது தனக்கு மிகப்பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதுடன், இவ்வாறானதொரு சம்பவத்தை தான் ஒருபோதும் பார்த்ததில்லையென அவுஸ்திரேலிய அணியின் உபதலைவரும் விக்கெட் காப்பாளருமான அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் நடைபெற்ற 2வது ஒருநாள் போட்டியில் குமார்தர்மசேன வீசிய பந்தில் சிமொண்ட்ஸ் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்ததாக இலங்கை நடுவர் பீற்றர்மனுவல் தீர்ப்பளித்திருந்தார்.

ஆனாலும், அது தவறென உணர்ந்து உடனடியாகவே மற்ற நடுவருடன் கலந்தாலோசித்துவிட்டு அண்ட்ரு சிமொண்ட்ஸ் எல்லைக்கோட்டைத் தாண்டு முன்னரே அவரைத் திருப்பியழைத்திருந்தார். சிமொண்ட்ஸ் எல்லைக்கோட்டைத் தாண்டிச்சென்றிருந்தால் கிரிகெட் விதிகளின்படி அவரை மீள அழைக்கமுடியாது. ஆனாலும் வேகமாகச் செயற்பட்டு பீற்றர்மனுவல் சிமொண்ட்ஸை திருப்பியழைத்தது அனைவராலும் பாராட்டப்பட்டது.

சிமொண்ட்ஸ் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டபோது எதிர்முனையில் அடம்கில்கிறிஸ்ட் நின்றிருந்தார்.இந்த நிகழ்வை முன்னர் ஒருபோதும் தான் பார்த்ததில்லை என்று அண்மைக்காலங்களில் ஆடுகளங்களில் மறக்கமுடியாத பல சம்பவங்களை தான் அருகிலிருந்து பார்த்ததாகவும் கில்கிறிஸ்ட் கூறியிருந்தார்.

மத்யூ ஹைடன் உலகசாதனை படைத்தது, இங்கிலாந்து அணிக்கெதிராக கடந்த சீசனில் ஸ்ரீவோ சதமடித்தது, அண்ட்ரு சிமொண்ட்ஸ் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டு பின்னர் திருப்பியழைக்கப்பட்டது என்பனவெல்லாம் தான் நேரில் பார்த்த அற்புதமான நிகழ்வுகள் என கில்கிறிஸ்ட் அவுஸ்ரேலியாவின் 'த ஏஜ்' பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.



இவையெல்லாம் கிரிகெட் மைதானத்தில் தான் ஒருபோதுமே பார்த்திராத நிகழ்வுகள் எனவும், சிமொண்ட்ஸை திருப்பியழைப்பதற்கு நடுவர்கள் முடிவுசெய்து அதற்கான அனுமதியை இலங்கை அணித்தலைவர் மாவன் அத்தபத்துவிடம் கோரியபோது அவர் எதுவித எதிர்ப்பையும் தெரிவிக்காது உடனடியாகவே தனது சம்மதத்தை தெரிவித்தது தன்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்ததாகவும் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

அத்தப்பத்து ஒரு நிமிடம் தாமதித்திருந்தால் கூட திருப்பி அழைத்திருக்க முடியாது. நேர்மை பாராட்டுதற்குரியது. ■

நீதி. . .

## இதயத்தைத் தொடும் இரு உண்மைச் சம்பவங்கள்

### 1. கரிகாலனுக்காக உயிர் கொடுத்த டேவிட்

*காலம் 09.06.1991 நடந்தது - தமிழீழக் கடல்*

ஒரு மிக முக்கிய கடற்பயணம், தேவை பெரியது. டேவிட் தேவையான ஒழுங்குகளை வழமைபோல் சரி பார்க்கிறான். கடல் தெரிந்தவர்கள் கடலில் ஓடத் தயங்கும் காலநிலை, ஆனாலும் பிரயாணம் அவசியமானதாகவும், ஒத்திவைக்க முடியாததாகவும் இருந்தது.

கடலைத் தவிர எல்லாமே வழமை போலத்தான். வழமையான தடபுடல், வேகமான பிக்கப்..., பெரிய நம்பிக்கை விதையை நெஞ்சில் விதைத்துவிட்டு டேவிட் ஆயத்தமாகிறான். வழமையான ஓடித்திரியும் நேவியையும் காணவில்லை. எல்லாமே நம்பிக்கையுடன் இருக்கின்றது. வண்டி புறப்படும். அதுவும் டேவிட் நேரில் புறப்படும் காரணம் சொல்லப்படாவிட்டாலும், வழமைபோலவே ஊகித்துக் கொண்டு வழியனுப்புகிறார்கள். டேவிட்டை அன்புடன் வளர்த்துப் பாதுகாத்த மக்கள் - அவனுடன் மிக அன்பாகப் பழகியவர்களில் நல்லாய்க் கடல் தெரிந்தவர்கள் அன்று கரைக்கு வரவில்லை -

படகு நீரில் இறங்குகிறது. "குழந்தைப் பிள்ளையை கையிலே பிடித்துக் கூட்டிச் செல்லும் வாஞ்சையுடன்" இரு கரையிலும் ஆட்கள் வரிசையாய் நின்று, படகினை கடலுள் இழுத்துச் செல்கிறார்கள். இடுப்பளவு தண்ணீரில் இறங்கிய பின்னா், அணியத்தில் நின்ற அரி தடியால் ஊன்ற படகு தள்ளாடி நகர, அண்ணாந்து நின்ற என்ஜின்வால்கள் தண்ணீரில் குளிக்க, எல்லாம் வழமைபோலவே.

"நல்லாய் சேவிஸ் போட்ட என்ஜின் ஒரு இழுவையில் ஸ்ராட் வர", இருட்டில் நின்ற தோழா்களும், மக்களும் வண்டியில் நிற்பவா்களுக்கு "தெரியாது என்று தெரிந்தும்" கையை உயர்த்தி மெல்ல அசைக்கிறார்கள். வண்டியில் நின்றவர்களும் கையசைத்திருப்பார்கள்.....?

ஒரு என்ஜினில் கொஞ்சத்தூரம் ஓடிப்போய் நின்று தயாராகையில், "துணியில் பொத்தி ரோச்லைட் அடிப்பது" தெரிகிறது.

"அல்பா, அல்பா..... என்ன மாதிரி?"

"பிரச்சனையில்லை, குதிரைக்குச் சாப்பாடு கொடுக்கினம்..."

கரிகாலனின் பதில் வோக்கியில் கேட்கிறது.

பின் ஒவ்வொரு என்ஜினாகச் சத்தமிட படகு நகராமலே என்ஜின் சத்தம் அதிகரித்து, குறைந்து, மிக அதிகரித்து, தணிவது கேட்கிறது.

படகு வழமைபோல் வலப்புறமாய் வட்டமிட்டு, நிழலாய் நகா்கிறது. "எப்போதும் போல், 'தேவையும் கடலும் தவிர' மற்ற எல்லாம் வழமைபோல்".

நீரைக் கிழித்து, வெண்நுரை கிளம்ப, அலையில் எழும்பிப் பாய்ந்து....படகு புறப்பட்டு விட்டது. அதிகரித்த சத்தமும், கரையில் கூடிய கூட்டமும், சிறிது சிறிதாய் மறைய, கடல் தெரியாதவர்களின் திருப்திப் பெருமூச்சுடன், கடலைத் தெரிந்தவா்களின் கனத்த பெருமூச்சு" கலந்தபோது, "வண்டி வெளிக்கிட்டு விட்டது".

என்ஜின் சத்தம் கரைவதற்கு முனனரே, கரையிலுள்ள வோக்கி,

"அல்பா.... அல்பா. " ▶

## நீதி. . .

"தண்ணியடிக்குது தானே.... வோக்கியை அதுதான் 'லொக் ரியூப்பிலை' வைத்திட்டினம் போல" எனக் கூறிவிட்டு, முயற்சியை கைவிடும்போதும் கூட, என்ஜின் சத்தம் கேட்டுக் கொண்டு தானிருக்கிறது.

நேரம் கரைய, முகாமுக்குத் திரும்ப நினைக்கும் வேளையில், தூரத்து முகாம் வோக்கியில் ஓர் அவசர அழைப்பு. "வோக்கியில் அல்பா தொடர்பெடுத்தது..."

"என்னவாம்" ...

"கிளியரில்லை, சரியாக விளங்கேல்லை பிறபோ.... பிறபோ.... என்று அவையள் கூப்பிட்டது மாதிரியிருந்தது...."

"சொல்லு" .....

"போட் வெடிச்சிட்டுது, வண்டி அனுப்புங்கோ, எண்ட மாதிரிக கிடந்தது. அவையளின்ரை கிளியரில்லை, ஒண்டும் விளங்கேல்லை" .....

"ஆர் கதைச்சது" ...

"டேவிட் அண்ணை மாதிரித்தான் கிடந்தது, ஒண்டும் விளங்கேல்லை..."

அடுத்த படகினை ஆயத்தம் செய்த வேளை, என்ஜின் எடுக்க பிக்கப் விரைந்தவேளை, உறுதியற்ற வோக்கிச் செய்தியை நம்புவதா, இல்லையா என்று யோசித்த வேளை, நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. அலை விரித்துக் கொண்டிருந்தது.

சன்னதம் கொண்டு நின்றது கடல். தேடப்போகும் படகினை, தேடப்போகவென மற்றப் படகை, தயாராக வைக்க, வைக்கும் கடல்!

நேரம் செல்லச் செல்ல "வோக்கிச் செய்தி பிரமையோ?" என நினைக்க வைக்கும், வெறுமையுடன் காத்திருக்கும் வேளையில், தேடப்போன படகின் வோக்கி அழைக்கிறது.

"அரியைக் கண்டிட்டம், தூரத்தில் இன்னுமொரு ஆள் தெரியுது....."

"என்ன மாதிரி........ என்ன மாதிரி" என்ற வோக்கிக்கு பதில் சொல்லாமல் தேடும் படகு கரைநோக்கி வர, படகில் அரியுடன் ரட்ணா.

"என்ன நடந்தது?"

"போட் பிரிஞ்சிட்டுது, நடு வலை முறிஞ்சு அணியம் தனிய, கடயால் தனிய ரெண்டாப் போச்சுது"

"மற்றாக்கள் என்ன மாதிரி? டேவிட் அண்ணை என்னமாதிரி?"

"இருட்டுக்கை எல்லாரையும் கூப்பிட்டு டேவிட் அண்ணை ஒண்டாக்கினவர், எல்லாரையும் நீந்தச் சொல்லிப்போட்டு, அவர் கரிகாலனைக் கூப்பிட்டு தன்னட்டை எடுத்தவர்."

முழுவிடயங்களையும் சொல்லமுடியாது அரியும், ரட்ணாவும் மயங்கி விட்டார்கள்.

மீட்கப்பட்ட இருவரும் உப்பு நீரால் உதடுகள் வெடித்து, முகம் புண்ணாகி, "கோலம் கெட்டுப்போய்" இருந்தார்கள்.

படகுகள் போயின, வந்தன. செய்தி கேள்விப்பட்ட சனமெல்லாம் கரைமுழுக்கக் கூடிநின்று தேடினர். படகுகளின் தேடுதலுக்கு மேலாக, டேவிட்டின் திறமையில் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

"முதலும் இரண்டு நாள் கடலுக்கை கிடந்து, வந்து சேர்ந்தவனெல்லே!"

"டேவிட்டின் நீச்சல் திறமையில் எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது.

"உந்த மட்டு மட்டு நீச்சல் பெடியள் வந்து சேர்ந்திட்டாங்களாம். டேவிட் ஏன் வரமாட்டான்?" ►

## நீதி. . .

எல்லோரும் நம்பிக்கையுடன் காத்திருந்த போதும், அரி வைத்தியசாலையில் கூறிக்கொண்டிருந்தான் "எங்களை நீந்தச் சொல்லிப்போட்டு அவர் கரிகாலனைத்தான், இழுத்துக் கொண்டு நிண்டவர்..........................................................................................

படகில் சென்றவர்களில் 'கடலுடன் கொஞ்சமும் பரிச்சயம் இல்லாத', நீச்சல் தெரியாதவன்" கரிகாலன் மட்டும்தான்.

எல்லோரும் நம்பிக்கையுடன் இருந்த போதும், அரியையும், ரட்ணாவையும் தவிர வேறு எவரும் வரவில்லை....

டேவிட்டும் வரவில்லை.....

**லெப். கேணல்டேவிட் 09. 06. 1991 இல் கடலில் கலந்த கவிதையானான் தனது 25வது வயதில்.**

■

*உதவி - கடற்புலிகள்*

**2. சீனருக்காக உயிர் கொடுத்த டாம்**

***காலம் செப். 11, 2001 - உலகவர்த்தக மையக் கட்டடம்***

சென்ற செப். 11 அன்று உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டபோது 65 - வது மாடியிலிருந்த ஒரு சீனர் மீது மேசை சரிந்து விழ, கால் முறிந்து போனது. உடனிருந்த நண்பர்கள் எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஓட டாம் என்கிற அமெரிக்கர் மட்டும் இவரை விடவில்லை. இந்தச் சீனரால் ஓரிரு அடிகள் கூட எடுத்து வைக்க முடியவில்லை. இவரைத் தூக்கினாலும் அலறுகின்றார். தோளில் தாங்கியவாறும் அவரால் நகர முடியவில்லை. எனினும் நண்பர்கள் உதவியுடன் 30 மாடிகள் கீழே கொண்டு வந்து விட்டார். ஆனால் கூட்ட நெரிசல் அதிகரிக்க, இடிபாடுகள் அதிகமாக, எல்லோருக்கும் உயிர் பயம் தொற்றிக் கொண்டது. நண்பர்கள் உதவிக்கு ஆள் அனுப்புகிறேன் என்று சொல்லி விட்டு ஓடினார்கள். அந்தப் பக்கம் வந்த தீயணைப்புப்படை வீரர்கள் இவர்களைப் பார்த்து என்னவென்று விசாரிக்க டாம் நிலைமையை விளக்குகிறார்.

"இந்த நேரத்தில் அவரவர்கள் உயிரை அவரவர்கள் தாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நீங்களாவது தப்பி ஓடுங்கள்" என்று சொல்லி விட்டு டாமைப் பார்க்க, "Sorry Sir, if I Can not take him down, I am going to be here with him" - தனியே இவரை விட்டுச் செல்ல மாட்டேன். இவரால் வர முடியாவிட்டால் நான் கூடவே இருப்பேன்.

அடுத்த நாள்தான் தெரிந்தது, அந்தச் சீனரும் டாமும் உயிருடன் கீழே வரவில்லையென்று.

நீதி: வாழ்க்கையில் ஆதாயங்களையே ஆதாரமாகக் கொண்டு வாழும் மனிதர்களிடையே தாம் அறிந்த ஒரு நபருக்காக தம் வாழ்க்கையையே பணயம் வைக்கும் உள்ளம் எத்தகையவருக்கு வாய்க்கும். சூழ்ச்சிகளற்ற இளகிய மனதும், ஆரவாரமற்ற கலப்படமில்லாத அன்பும் உள்ளவர்களுக் மட்டும்தான் இது சாத்தியம். டாமுக்கு மனைவியும், மூன்று சிறு பெண் குழந்தைகளும் உண்டு. டேவிட்டிற்கு . . .

***கள்ளங்கபடமின்றி இருப்பது என்பது ஒரு மலரைப் போன்றது. தொட்டால் உதிர்ந்து விடும்.***

உதவி – அரும்பு ■

## அறிமுகம்: Chanakya's Mind Games # 35
## The Terminator

Sunday observer November 23, 2003.

அழகிய குளம் ஒன்றில் 100 இற்கும் 150 இற்கும் இடைப்பட்ட தவளைகள் வசித்து வந்தன. ஒரு துயரமான ஞாயிற்றுக் கிழமை எங்கிருந்தோ வந்த இராட்சதக் கொக்கு தவளைகளில், குறித்த எண்ணிக்கையானதைச் சாப்பிட்டுவிட்டுச் சென்றது. அதன் பின்பு அவ் இராட்சதக் கொக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அந்தக் குளத்திற்கு வரத் தொடங்கியது. தனது ஒவ்வொரு வருகையின் போதும் சம எண்ணிக்கையான தவளைகளை அந்தக் கொக்கு சாப்பிட்டது. அதே வேளை கொக்கினது அடுத்தடுத்துள்ள வருகைகளுக்கிடையில் (Between successive visits) குளத்திலுள்ள தவளைகள் மூன்று மடங்காயின. கொக்கு தனது 4வது வருகையில் குளத்திலுள்ள அனைத்து தவளைகளையும் சாப்பிட்டு முடித்திருப்பின் கொக்கினது 1வது வருகையின் போது குளத்தில் எத்தனை தவளைகள் இருந்திருக்கும்.

சண்டே ஒப்சேவர் (Sunday obserer) வாரப் பத்திரிகையில் இருவாரங்களுக்கு ஒரு தடவை உங்கள் சிந்தனைக்கு சவால்விடும் கணிதப் புதிர்கள், கொழும்பு பல்கலைக்கழக கணிதத் துறையால் பிரசுரிக்கப்பட்டு முதலில் கிடைக்கும் சிறந்த 10 விடைகளிற்கு ரூ750/= வீதம் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. Chanakya's Mind Games என்ற தலையங்கத்தின் கீழ் பிரசுரிக்கப்படும் இக் கணிதப் புதிர்களை விடுவிக்க அடிப்படைக் கணித அறிவு போதுமானது. ஆனால் சில புதிர்களிற்கு விடையளிக்க ஆழமான சிந்தனை தேவை.

கணிதத்தில் ஆர்வ முள்ளவர்களும், கணிதம் கற்பவர்களும் இப்பகுதியை பயன்படுத்திக் கொள்ளலாம். சில வினாக்கள் தரம் 5, 6 மாணவர்களின் கணித அறிவைக் கொண்டே செய்யக்கூடியது. ஆங்கிலத்தை வாசித்து புரிந்து கொள்ள சிரமம் இருப்பின் ஆசிரியர் ஒருவரின் உதவியை நாடலாம். அல்லது அகராதியை பயன்படுத்தலாம்.

Sunday observer இன் விஷேட இணைப்பான Etcetera இல் (44வது பக்கம்) இவ் வினாக்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. 2002 யூன் மாதத்தில் இருந்து Chanakya's mind games ஆரம்பிக்கின்றது. என்ன நூல்நிலையம் சென்று பழைய Sunday observer களை புரட்டத் தொடங்கிவிட்டீர்களா?

குறிப்பு :- 2003 ஓகஸ்ட், செப்ரெம்பர் Sunday observer களில் க. பொ. த (உ/த) இல் இடம்பெறும் வரிசைமாற்றம் சேர்மானம் பாடப்பகுதியில் உள்ள வினாக்களும் உதவிக்குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன கடந்த ஆண்டு வினாவிடை உட்பட.




## முதன் முறையாகத் தமிழில் வெளிவரும் என்சைக்ளோபீடியோ

| | | |
|---|---|---|
| 1. | நம்மவர் செய்த விந்தைகள் | ரூ. 100 |
| 2. | அவர்கள் செய்த விந்தைகள் | ரூ. 100 |
| 3. | உலக மகா கொடுங்கோலர்கள் | ரூ. 100 |
| 4. | உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள் | ரூ. 100 |
| 5. | விந்தை உயிரினங்கள் | ரூ. 100 |
| 6. | அரண்மனை ரகஸியங்கள் | ரூ. 100 |
| 7. | உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள் | ரூ. 100 |
| 8. | நம்ப முடியாத உண்மைகள் | ரூ. 100 |
| 9. | வியப்பூட்டும் உண்மைகள் | ரூ. 100 |
| 10. | தாவர உலகிலே! | ரூ. 100 |
| 11. | விந்தைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும் | ரூ. 100 |
| 12. | யார் என்ன சொன்னார்கள்? | ரூ. 100 |
| 13. | நீருலகிலே! | ரூ. 100 |
| 14. | பாலூட்டிகள் வரிசையிலே | ரூ. 100 |

இலங்கை விலை ரூ. 300/-

நூல்கள் தேவையானோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

த. ரவீந்திரன்
'கௌரி வாசம்'
இணுவில் மத்திய கல்லூரி
ஒழுங்கை, இணுவில்.




வெளியீடு: தூண்டி, திருநெல்வேலி. பதிப்பு: குரு பதிப்பகம், திருநெல்வேலி.

## கணிதச் சிக்கல் 02

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

வயது : ........................ தரம் : ........................

பாடசாலையின் பெயர் : ..................................................

..................................................

மாணவர் கையொப்பம் : ..................................................

## பொது அறிவுப் போட்டி 02

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

வயது : ........................ தரம் : ........................

பாடசாலையின் பெயர் : ..................................................

..................................................

மாணவர் கையொப்பம் : ..................................................